## திருப்புகழ் 1 - கைத்தல நிறைகனி (வயலூர்)

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
    கப்பிய கரிமுக ...... னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
    கற்பக மெனவினை ...... கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
    மற்பொரு திரள்புய ...... மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
    மட்டவிழ் மலர்கொடு ...... பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
    முற்பட எழுதிய ...... முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
    அச்சது பொடிசெய்த ...... அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
    அப்புன மதனிடை ...... இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
    அக்கண மணமருள் ...... பெருமாளே.

## திருப்புகழ் - 2 - பக்கரைவி சித்ரமணி (வயலூர்)

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
    பட்சியெனு முக்ரதுர ...... கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
    பட்டுருவ விட்டருள்கை ...... வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு
    சிற்றடியு முற்றிய.... பனிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
    செப்பென எனக்கருள்கை ...... மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடனெய்
    எட்பொரிய வற்றுவரை ...... இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
    ரிப்பழமி டிப்பல்வகை ...... தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பட்சண மெனக்கொளொரு
    விக்கிநச மர்த்தனெனும் ...... அருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
    வித்தகம ருப்புடைய ...... பெருமாளே.

## திருப்புகழ் 3 - உம்பர் தரு (விநாயகர்)

**உம்பர்தருத் தேநுமணிக் ...... கசிவாகி**
**ஒண்கடலிற் றேனமுதத் ...... துணர்வூறி**
**இன்பரசத் தேபருகிப் ...... பலகாலும்**
**என்றனுயிர்க் காதரவுற் ...... றருள்வாயே**
**தம்பிதனக் காகவனத் ...... தணைவோனே**
**தந்தைவலத் தாலருள்கைக் ...... கனியோனே**
**அன்பர்தமக் கானநிலைப் ...... பொருளோனே**
**ஐந்துகரத் தானைமுகப் ...... பெருமாளே**

## திருப்புகழ் - 4 - நினது திருவடி

**நினது திருவடி சத்திம யிற்கொடி**
**நினைவு கருதிடு புத்திகொ டுத்திட**
**நிறைய அமுதுசெய் முப்பழ மப்பமு ...... நிகழ்பால்தேன்**
**நெடிய வளைமுறி இக்கொடு லட்டுகம்**
**நிறவில் அரிசி பருப்பவல் எட்பொரி**
**நிகரில் இனிகத லிக்கனி வர்க்கமும் ...... இளநீரும்**
**மனது மகிழ்வொடு தொட்டக ரத்தொரு**
**மகர சலநிதி வைத்தது திக்கர**
**வளரு கரிமுக ஒற்றைம ருப்பனை ...... வலமாக**
**மருவு மலர்புனை தொத்திர சொற்கொடு**
**வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு**
**வனச பரிபுர பொற்பத அர்ச்சனை ...... மறவேனே**
**தெனன தெனதென தெத்தென னப்பல**
**சிறிய அறுபத மொய்த்துதி ரப்புனல்**
**திரளும் உறுசதை பித்தநி ணக்குடல் ...... செறிமுளை**
**செரும உதரநி ரப்புசெ ருக்குடல்**
**நிரைய அரவநி றைத்தக ளத்திடை**
**திமித திமிதிமி மத்தளி டக்கைகள் ...... செகசேசே**
**எனவெ துகுதுகு துத்ததென ஒத்துகள்**
**துடிகள் இடிமிக ஒத்துமு ழக்கிட**
**டிமுட டிமுடிமு டிட்டிமெ னத்தவில் ...... எழுமோசை**
**இகலி அலகைகள் கைப்பறை கொட்டிட**
**இரண பயிரவி சுற்றுந டித்திட**
**எதிரு நிசிசர ரைப்பெலி யிட்டருள் ...... பெருமாளே.**

**5 திருப்புகழ் 13.சந்ததம் பந்த (திருப்பரங்குன்றம்)**

**சந்ததம் பந்தத் ...... தொடராலே**
**சஞ்சலந் துஞ்சித் ...... திரியாதே**
**கந்தனென் றென்றுற் ...... றுனைநாளும்**
**கண்டுகொண் டன்புற் ...... றிடுவேனோ**
**தந்தியின் கொம்பைப் ...... புணர்வோனே**
**சங்கரன் பங்கிற் ...... சிவைபாலா**
**செந்திலங் கண்டிக் ...... கதிர்வேலா**
**தென்பரங் குன்றிற் ...... பெருமாளே.**

**6.திருப்புகழ் 101 விறல்மாரன் ஐந்து (திருச்செந்தூர்)**

**விறல்மார னைந்து மலர்வாளி சிந்த**
**மிகவானி லிந்து ...... வெயில்காய**
**மிதவாடை வந்து தழல்போல வொன்ற**
**வினைமாதர் தந்தம் ...... வசைகூற**
**குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட**
**கொடிதான துன்ப ...... மயல்தீர**
**குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து**
**குறைதீர வந்து ...... குறுகாயோ**
**மறிமானு கந்த இறையோன்ம கிழ்ந்து**
**வழிபாடு தந்த ...... மதியாளா**
**மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச**
**வடிவேலெ றிந்த ...... அதிதீரா**
**அறிவால றிந்து னிருதாளி றைஞ்சு**
**மடியாரி டைஞ்சல் ...... களைவோனே**
**அழகான செம்பொன் மயில்மேல மர்ந்து**
**அலைவாயு கந்த ...... பெருமாளே.**

**7.திருப்புகழ் 165 தமரும் அமரும் (பழநி)**

**தமரு மமரு மனையு மினிய**
**தனமு மரசும் ...... அயலாகத்**
**தறுகண் மறலி முறுகு கயிறு**
**தலையை வளைய ...... எறியாதே**
**கமல விமல மரக தமணி**
**கனக மருவு ...... மிருபாதங்**
**கருத அருளி யெனது தனிமை**
**கழிய அறிவு ...... தரவேணும்**

**குமர சமர முருக பரம**
**குலவு பழநி ...... மலையோனே**
**கொடிய பகடு முடிய முடுகு**
**குறவர் சிறுமி ...... மணவாளா**
**அமர ரிடரு மவுண ருடலு**
**மழிய அமர்செய் ...... தருள்வோனே**
**அறமு நிறமு மயிலு மயிலு**
**மழகு முடைய ...... பெருமாளே.**

**8.திருப்புகழ் 228 பாதி மதிநதி (சுவாமிமலை)**

**பாதி மதிநதி போது மணிசடை**
**நாத ரருளிய ...... குமரேசா**
**பாகு கனிமொழி மாது குறமகள்**
**பாதம் வருடிய ...... மணவாளா**
**காது மொருவிழி காக முறஅருள்**
**மாய னரிதிரு ...... மருகோனே**
**கால னெனையணு காம லுனதிரு**
**காலில் வழிபட ...... அருள்வாயே**
**ஆதி யயனொடு தேவர் சுரருல**
**காளும் வகையுறு ...... சிறைமீளா**
**ஆடு மயிலினி லேறி யமரர்கள்**
**சூழ வரவரு ...... மிளையோனே**
**சூத மிகவளர் சோலை மருவுசு**
**வாமி மலைதனி ...... லுறைவோனே**
**சூர னுடலற வாரி சுவறிட**
**வேலை விடவல ...... பெருமாளே.**

**9.திருப்புகழ் 243 இருமலு ரோக (திருத்தணிகை)**

**இருமலு ரோக முயலகன் வாத**
**மெரிகுண நாசி ...... விடமேநீ**
**ரிழிவுவி டாத தலைவலி சோகை**
**யெழுகள மாலை ...... யிவையோடே**
**பெருவயி றீளை யெரிகுலை சூலை**
**பெருவலி வேறு ...... முளநோய்கள்**
**பிறவிகள் தோறு மெனைநலி யாத**
**படியுன தாள்கள் ...... அருள்வாயே**
**வருமொரு கோடி யசுரர்ப தாதி**

மடியஅ நேக ...... இசைபாடி
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை ...... விடுவோனே
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி
தருதிரு மாதின் ...... மணவாளா
சலமிடை பூவி னடுவினில் வீறு
தணிமலை மேவு ...... பெருமாளே.

**10. திருப்புகழ் 1309 காரணமதாக (பழமுதிர்ச்சோலை)**

காரணம தாக வந்து ...... புவிமீதே
காலனணு காதி சைந்து ...... கதிகாண
நாரணனும் வேதன் முன்பு ...... தெரியாத
ஞானநட மேபு ரிந்து ...... வருவாயே
ஆரமுத மான தந்தி ...... மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு ...... விழியோனே
சூரர்கிளை மாள வென்ற ...... கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற ...... பெருமாளே.

**11. திருப்புகழ் 330 முட்டுப் பட்டு (காஞ்சீபுரம்)**
**பஞ்சபூதத் தலம் - நிலம்.**

முட்டுப் பட்டுக் ...... கதிதோறும்
முற்றச் சுற்றிப் ...... பலநாளும்
தட்டுப் பட்டுச் ...... சுழல்வேனைச்
சற்றுப் பற்றக் ...... கருதாதோ
வட்டப் புட்பத் ...... தலமீதே
வைக்கத் தக்கத் ...... திருபாதா
கட்டத் தற்றத் ...... தருள்வோனே
கச்சிச் சொக்கப் ...... பெருமாளே

**12. திருப்புகழ் 363. நாடித் தேடி (திருவானைக்கா)**
**பஞ்சபூதத் தலம் - நீர்**

நாடித் தேடித் ...... தொழுவார்பால்
நானத் தாகத் ...... திரிவேனோ
மாடக் கூடற் ...... பதிஞான
வாழ்வைச் சேரத் ...... தருவாயே
பாடற் காதற் ...... புரிவோனே
பாலைத் தேனொத் ...... தருள்வோனே

**ஆடற் றோகைக் ...... கினியோனே**
**ஆனைக் காவிற் ...... பெருமாளே.**

## 13. திருப்புகழ் 6 முத்தைத்தரு (திருவருணை)
## பஞ்சபூதத் தலம் - நெருப்பு.

**முத்தைத்தரு பத்தித் திருநகை**
**அத்திக்கிறை சத்திச் சரவண**
**முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்**
**முக்கட்பர மற்குச் சுருதியின்**
**முற்பட்டது கற்பித் திருவரும்**
**முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்**
**பத்துத்தலை தத்தக் கணைதொடு**
**ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு**
**பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்**
**பத்தற்கிர தத்தைக் கடவிய**
**பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்**
**பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே**
**தித்தித்தெய ஒத்தப் பரிபுர**
**நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி**
**திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்**
**திக்குப்பரி அட்டப் பயிரவர்**
**தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு**
**சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்**
**கொத்துப்பறை கொட்டக் களமிசை**
**குக்குக்குகு குக்குக் குகுகுகு**
**குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை**
**கொட்புற்றெழ நட்பற் றவுணரை**
**வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி**
**குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே.**

## 14. திருப்புகழ் 447 சிரத்தானத்திற் ( திருக்காளத்தி )
## பஞ்ச பூதத் தலம் - காற்று

**சிரத்தா னத்திற் ...... பணியாதே**
**செகத்தோர் பற்றைக் ...... குறியாதே**
**வருத்தா மற்றொப் ...... பிலதான**
**மலர்த்தாள் வைத்தெத் ...... தனையாள்வாய்**
**நிருத்தா கர்த்தத் ...... துவநேசா**

நினைத்தார் சித்தத் ...... துறைவோனே
திருத்தாள் முத்தர்க் ...... கருள்வோனே
திருக்கா ளத்திப் ...... பெருமாளே.

**15. திருப்புகழ் 452 குகனெ குருபரனே ( சிதம்பரம் )**
**பஞ்ச பூதத் தலம் - ஆகாயம்.**

குகனெ குருபர னேயென நெஞ்சிற்
புகழ அருள்கொடு நாவினி லின்பக்
குமுளி சிவவமு தூறுக வுந்திப் ...... பசியாறிக்
கொடிய இருவினை மூலமும் வஞ்சக்
கலிகள் பிணியிவை வேரொடு சிந்திக்
குலைய நமசிவ யோமென கொஞ்சிக் ...... களிகூரப்
பகலு மிரவுமி லாவெளி யின்புக்
குறுகி யிணையிலி நாடக செம்பொற்
பரம கதியிது வாமென சிந்தித் ...... தழகாகப்
பவள மனதிரு மேனியு டன்பொற்
சரண அடியவ ரார்மன வம்பொற்
றருண சரண்மயி லேறியு னம்பொற் ...... கழல்தாராய்
தகுட தகுதகு தாதக தந்தத்
திகுட திகுதிகு தீதக தொந்தத்
தடுடு டுடுடுடு டாடக டிங்குட் ...... டியல்தாளம்
தபலை திமிலைகள் பூரிகை பம்பைக்
கரடி தமருகம் வீணைகள் பொங்கத்
தடிய ழனவுக மாருத சண்டச் ...... சமரேறிக்
ககன மறைபட ஆடிய செம்புட்
பசிகள் தணிவுற சூரர்கள் மங்கக்
கடல்க ளெறிபட நாகமு மஞ்சத் ...... தொடும்வேலா
கயிலை மலைதனி லாடிய தந்தைக்
குருக மனமுன நாடியெ கொஞ்சிக்
கனக சபைதனில் மேவிய கந்தப் ...... பெருமாளே.

**16 .திருப்புகழ் 1212 ஆசைகூர் பத்தன் (பொதுப்பாடல்)**

ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மானபூ வைத்து ...... நடுவேயன்
பானநூ லிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி ...... யொருஞான
வாசம்வீ சிப்ர காசியா நிற்ப

மாசிலோர் புத்தி ...... யளிபாட
மாத்ருகா புஷ்ப மாலைகோ லப்ர
வாளபா தத்தி ...... லணிவேனோ
மூசுகா னத்து மீதுவாழ் முத்த
மூரல்வே டிச்சி ...... தனபார
மூழ்குநீ பப்ர தாபமார் பத்த
மூரிவே ழத்தின் ...... மயில்வாழ்வே
வீசுமீ னப்ப யோதிவாய் விட்டு
வேகவே தித்து ...... வருமாசூர்
வீழமோ திப்ப ராரைநா கத்து
வீரவேல் தொட்ட ...... பெருமாளே.

17. திருப்புகழ் 114 ஆறுமுகம் ஆறுமுகம் (பழநி)

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் ...... என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய ...... தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
ஈசஎன மானமுன ...... தென்றுமோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையு ...... மென்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை ...... தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும ...... டங்கல்வேலா
சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி ...... அண்டகூடஞ்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக ...... தம்பிரானே.

18. திருப்புகழ் 616 ஐங்கரனை (கொங்கணகிரி)

ஐங்கரனை யொத்தமன மைம்புலம கற்றிவள
ரந்திபக லற்றநினை ...... வருள்வாயே
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமன ...... மருள்வாயே

தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி ...... யருள்வாயே
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனெ ...... யருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன
முன்றனைநி னைத்தமைய ...... அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரட்சைபுரி
வந்தணைய புத்தியினை ...... யருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுஉட லுற்றபொரு ...... ளருள்வாயே
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் ...... பெருமாளே

அந்திபக லற்றநினை ...... வருள்வாயே
அன்பொடுது திக்கமன ...... மருள்வாயே
சந்திரவெ ளிக்குவழி ...... யருள்வாயே
சம்ப்ரமவி தத்துடனெ ...... யருள்வாயே
உன்றனைநி னைத்தமைய ...... அருள்வாயே
வந்தணைய புத்தியினை ...... யருள்வாயே
கொண்டுஉட லுற்றபொரு ...... ளருள்வாயே
கொங்கணகி ரிக்குள்வளர் ...... பெருமாளே

## 19.திருப்புகழ் 599 தாமா தாம ஆலாபா (திருச்செங்கோடு)

தாமா தாமா லாபா லோகா
    தாரா தாரத் ...... தரணீசா
தானா சாரோ பாவா பாவோ
    நாசா பாசத் ...... தபராத
யாமா யாமா தேசா ரூடா
    யாரா யாபத் ...... தெனதாவி
யாமா காவாய் தீயே னீர்வா
    யாதே யீமத் ...... துகலாமோ
காமா காமா தீனா நீணா
    காவாய் காளக் ...... கிரியாய்கங்
காளா லீலா பாலா நீபா
    காமா மோதக் ...... கனமானின்
தேமார் தேமா காமீ பாகீ
    தேசா தேசத் ...... தவரோதுஞ்

சேயே வேளே பூவே கோவே
    தேவே தேவப் ...... பெருமாளே.

## 20. திருப்புகழ் 782 மாலினால் எடுத்த (வைத்தீசுரன் கோயில்)

மாலி னாலெ டுத்த கந்தல் சோறி னால்வ ளர்த்த பொந்தி
    மாறி யாடெ டுத்தசி ந்தை ...... யநியாய
மாயை யாலெ டுத்து மங்கி னேனை யாள னக்கி ரங்கி
    வாரை யாயி னிப்பி றந்து ...... இறவாமல்
வேலி னால்வி னைக்க ணங்கள் தூள தாள ரித்து உன்றன்
    வீடு தாப ரித்த அன்பர் ...... கணமூடே
மேவி யானு னைப்பொல் சிந்தை யாக வேக ளித்து கந்த
    வேளெ யாமெ னப்ப ரிந்து ...... அருள்வாயே
காலி னாலெ னப்ப ரந்த சூரர் மாள வெற்றி கொண்ட
    கால பாநு சத்தி யங்கை ...... முருகோனே
காம பாண மட்ட நந்த கோடி மாத ரைப்பு ணர்ந்த
    காளை யேறு கர்த்த னெந்தை ...... யருள்பாலா
சேலை நேர்வி ழிக்கு றம்பெ ணாசை தோளு றப்பு ணர்ந்து
    சீரை யோது பத்த ரன்பி ...... லுறைவோனே
தேவர் மாதர் சித்தர் தொண்டர் ஏக வேளு ருக்கு கந்த
    சேவல் கேது சுற்று கந்த ...... பெருமாளே.

## 21. திருப்புகழ் 638 உடுக்கத் துகில் (கதிர்காமம்)

உடுக்கத் துகில்வேணு நீள்பசி
    யவிக்கக் கனபானம் வேணுநல்
        ஒளிக்குப் புனலாடை வேணுமெய் ...... யுறுநோயை
ஒழிக்கப் பரிகாரம் வேணுமுள்
    இருக்கச் சிறுநாரி வேணுமொர்
        படுக்கத் தனிவீடு வேணுமிவ் ...... வகையாவுங்
கிடைத்துக் க்ருஹவாசி யாகிய
    மயக்கக் கடலாடி நீடிய
        கிளைக்குப் பரிபால னாயுயி ...... ரவமேபோம்
க்ருபைச்சித் தமுஞான போதமு
    மழைத்துத் தரவேணு மூழ்பவ
        கிரிக்குட் சுழல்வேனை யாளுவ ...... தொருநாளே
குடக்குச் சிலதூதர் தேடுக
    வடக்குச் சிலதூதர் நாடுக
        குணக்குச் சிலதூதர் தேடுக ...... வெனமேவிக்

குறிப்பிற் குறிகாணு மாருதி
யினித்தெற் கொருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும் ...... வரலாமோ
அடிக்குத் திரகார ராகிய
அரக்கர்க் கிளையாத தீரனு
மலைக்கப் புறமேவி மாதுறு ...... வனமேசென்
றருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய ...... பெருமாளே.
க்ருபைச்சித் தமுஞான போதமு
மழைத்துத் தரவேணு மூழ்பவ
கிரிக்குட் சுழல்வேனை யாளுவ ...... தொருநாளே

## 22. திருப்புகழ் 401 இருவினை அஞ்ச (திருவருணை)

இருவினை யஞ்ச மலவகை மங்க
இருள்பிணி மங்க ...... மயிலேறி
இனவரு ளன்பு மொழியக டம்பு
வினதக முங்கொ ...... டளிபாடக்
கரிமுக னெம்பி முருகனெ னண்டர்
களிமலர் சிந்த ...... அடியேன்முன்
கருணைபொ ழிந்து முகமும லர்ந்து
கடுகிந டங்கொ ...... டருள்வாயே
திரிபுர மங்க மதனுடல் மங்க
திகழ்நகை கொண்ட ...... விடையேறிச்
சிவம்வெளி யங்க ணருள்குடி கொண்டு
திகழநட டஞ்செய் ...... தெமையீண
அரசியி டங்கொள் மழுவுடை யெந்தை
அமலன்ம கிழ்ந்த ...... குருநாதா
அருணைவி லங்கல் மகிழ்குற மங்கை
அமளிந லங்கொள் ...... பெருமாளே.

## 23.திருப்புகழ் 637 அலகின் மாறு (கதிர்காமம்)

அலகின் மாறு மாறாத கலதி பூத வேதாளி
அடைவில் ஞாளி கோமாளி ...... அறமீயா
அழிவு கோளி நாணாது புழுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய ...... மருளாகிப்
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு

பருவ மேக மேதாரு ...... வெனயாதும்
பரிவு றாத மாபாதர் வரிசை பாடி யோயாத
பரிசில் தேடி மாயாத ...... படிபாராய்
இலகு வேலை நீள்வாடை யெரிகொள் வேலை மாசூரி
லெறியும் வேலை மாறாத ...... திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
லிறைவி கான மால்வேடர் ...... சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ்சீத
கதிர காம மூதூரி ...... லிளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேரு வேதேவர் ...... பெருமாளே.

## 24.திருப்புகழ் 1053 அதல சேடனாராட (பொதுப்பாடல்கள்)

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட ...... அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள ...... மவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட ...... மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி ...... வரவேணும்
கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை ...... பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடுதி ...... அலைமோதும்
உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் ...... மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் ...... பெருமாளே.

## 25. திருப்புகழ் 802 இறையத்தனையோ (திலதைப்பதி)

இறையத் தனையோ ...... அதுதானும்
இலையிட் டுணலேய் ...... தருகாலம்
அறையிற் பெரிதா ...... மலமாயை
அலையப் படுமா ...... றினியாமோ
மறையத் தனைமா ...... சிறைசாலை
வழியுய்த் துயர்வா ...... னுறுதேவர்

**சிறையைத் தவிரா ...... விடும்வேலா**
**திலதைப் பதிவாழ் ...... பெருமாளே.**

## 26. திருப்புகழ் 584 சரவண ஜாதா (விநாயகமலை-பிள்ளையார்பட்டி)

**சரவண ஜாதா நமோநம கருணைய தீதா நமோநம**
**சததள பாதா நமோநம ...... அபிராம**
**தருணக தீரா நமோநம நிருபமர் வீரா நமோநம**
**சமதள வூரா நமோநம ...... ஜகதீச**
**பரம சொரூபா நமோநம சுரர்பதி பூபா நமோநம**
**பரிமள நீபா நமோநம ...... உமைகாளி**
**பகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம**
**பவுருஷ சீலா நமோநம ...... அருள்தாராய்**
**இரவியு மாகாச பூமியும் விரவிய தூளேற வானவ**
**ரெவர்களு மீடேற ஏழ்கடல் ...... முறையோவென்**
**றிடர்பட மாமேரு பூதர மிடிபட வேதா னிசாசர**
**ரிகல்கெட மாவேக நீடயில் ...... விடுவோனே**
**மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகார வேதனும்**
**வசுவெனு மாகார ஈசனு ...... மடிபேண**
**மயிலுறை வாழ்வே விநாயக மலையுறை வேலா மகீதர**
**வனசர ராதார மாகிய ...... பெருமாளே.**

## 27. திருப்புகழ் 735 தாரகாசுரன் சரிந்து (தேவனூர்)

**தார காசு ரன்ச ரிந்து வீழ வேரு டன்ப றிந்து**
**சாதி பூத ரங்கு லுங்க ...... முதுமீனச்**
**சாக ரோதை யங்கு ழம்பி நீடு தீகொ ளுந்த அன்று**
**தாரை வேல்தொ டுங்க டம்ப ...... மததாரை**
**ஆர வார வும்பர் கும்ப வார ணாச லம்பொ ருந்து**
**மானை யாளு நின்ற குன்ற ...... மறமானும்**
**ஆசை கூரு நண்ப என்று மாம யூர கந்த என்றும்**
**ஆவல் தீர என்று நின்று ...... புகழ்வேனோ**
**பார மார்த மும்பர் செம்பொன் மேனி யாளர் கங்கை வெண்க**
**பால மாலை கொன்றை தும்பை ...... சிறுதாளி**
**பார மாசு ணங்கள் சிந்து வார வார மென்ப டம்பு**
**பானல் கூவி ளங்க ரந்தை ...... அறுகோடே**
**சேர வேம ணந்த நம்ப ரீச னாரி டஞ்சி றந்த**
**சீத ளார விந்த வஞ்சி ...... பெருவாழ்வே**

**தேவர் யாவ ருந்தி ரண்டு பாரின் மீது வந்தி றைஞ்சு**
**தேவனூர் விளங்க வந்த ...... பெருமாளே.**

## 28.திருப்புகழ் 216 சரண கமலாலயத்தில் (சுவாமிமலை)

**சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்**
**தவமுறைதி யானம் வைக்க ...... அறியாத**
**சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த**
**தமியன்மிடி யால்ம யக்க ...... முறுவேனோ**
**கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு**
**கயிலைமலை நாதர் பெற்ற ...... குமரோனே**
**கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலே செச்சை**
**கமழுமண மார்க டப்ப ...... மணிவோனே**
**தருணம் இதையா உதவிபுரிய தருணம் இதையா**
**தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய**
**சகலசெல்வ யோக மிக்க ...... பெருவாழ்வு**
**தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து**
**தவிபுரிய வேணு நெய்த்த ...... வடிவேலா**
**அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க**
**அரியதமிழ் தான ளித்த ...... மயில்வீரா**
**அதிசயம நேக முற்ற பழநிமலை மீது தித்த**
**அழகதிரு வேர கத்தின் ...... முருகோனே.**
**தருணம் இதையா உதவிபுரிய தருணம் இதையா**

## 29. திருப்புகழ் 598 காலனிடத்து (திருச்செங்கோடு)

**காலனிடத் ...... தணுகாதே**
**காசினியிற் ...... பிறவாதே**
**சீலஅகத் ...... தியஞான**
**தேனமுதைத் ...... தருவாயே**
**மாலயனுக் ...... கரியானே**
**மாதவரைப் ...... பிரியானே**
**நாலுமறைப் ...... பொருளானே**
**நாககிரிப் ...... பெருமாளே**
**சீலஅகத் ...... தியஞான**
**தேனமுதைத் ...... தருவாயே**

**30.திருப்புகழ் 636 திருமகள் உலாவும் (கதிர்காமம்)**

திருமகளு லாவு மிருபுயமு ராரி
    திருமருக நாமப் ...... பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
    தெரிதருகு மாரப் ...... பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
    மரகதம யூரப் ...... பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
    மருவுகதிர் காமப் ...... பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
    அமர்பொருத வீரப் ...... பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
    அமலர்குரு நாதப் ...... பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
    இமையவர்கு லேசப் ...... பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
    இருதனவி நோதப் ...... பெருமாளே.
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
    மரகதம யூரப் ...... பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
    மருவுகதிர் காமப் ...... பெருமாள்காண்

**31. திருப்புகழ் 949 தீராப் பிணிதீர (பேரூர்)**

தீராப் பிணிதீர சீவாத் ...... துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் ......கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே பாலாக்...கிரிராசே
பேராற் பெரியோனே பேரூர்ப் ....பெருமாளே.
தீராப் பிணிதீர சீவாத் ...... துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் ......கருள்வாயே

**32. திருப்புகழ் 567 பத்தியால் யானுனை (இரத்னகிரி)**

பத்தியால் யானுனைப் ...... பலகாலும்
    பற்றியே மாதிருப் ...... புகழ்பாடி
முத்தனா மாறெனைப் ...... பெருவாழ்வின்
    முத்தியே சேர்வதற் ...... கருள்வாயே
உத்தமா தானசற் ...... குணர்நேயா
    ஒப்பிலா மாமணிக் ...... கிரிவாசா

**வித்தகா ஞானசத் ...... திறிபாதா**
**வெற்றிவே லாயுதப் ...... பெருமாளே.**

## 33.திருப்புகழ் 650 விலைக்கு மேனியில் (திருக்கோணமலை)

**விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை**
**தரித்த வாடையு மணிப்பூணு மாகவெ**
**மினுக்கு மாதர்க ளிடக்காம மூழ்கியெ ...... மயலூறி**
**மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்**
**நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல**
**வெறுப்ப தாகியெ யுழைத்தேவி டாய்படு ...... கொடியேனைக்**
**கலக்க மாகவெ மலக்கூடி லேமிகு**
**பிணிக்கு ளாகியெ தவிக்காம லேயுனை**
**கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயு ...... மொருவாழ்வே**
**கதிக்கு நாதனி யுனைத்தேடி யேபுக**
**ழுரைக்கு நாயெனை யருட்பார்வை யாகவெ**
**கழற்கு ளாகவெ சிறப்பான தாயருள் ...... தரவேணும்**
**மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்**
**திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக**
**வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் ...... தருவேளே**
**வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்**
**அகத்ய மாமுநி யிடைக்காடர் கீரனும்**
**வகுத்த பாவினில் பொருட்கோல மாய்வரு ...... முருகோனே**
**நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்**
**திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர**
**நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் ...... வருவோனே**
**நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ**
**யெடுத்த வேல்கொடு பொடித்தூள தாஎறி**
**நினைத்த காரிய மநுக்கூல மேபுரி ...... பெருமாளே.**

## 34.திருப்புகழ் 653 வேழம் உண்ட (காசி)

**வேழ முண்ட விளாகனி ...... யதுபோல**
**மேனி கொண்டு வியாபக ...... மயலூறி**
**நாளு மிண்டர்கள் போல்மிக ...... அயர்வாகி**
**நானு நைந்து விடாதருள் ...... புரிவாயே**
**மாள அன்றம ணீசர்கள் ...... கழுவேற**
**வாதில் வென்ற சிகாமணி ...... மயில்வீரா**

**காள கண்ட னுமாபதி ...... தருபாலா**
**காசி கங்கையில் மேவிய ...... பெருமாளே**

**35.திருப்புகழ் 557 பகலிரவினில்  (சென்னிமலை)**
**பகலிரவினிற் ...... றடுமாறா**
**பதிகுருவெனத் ...... தெளிபோத**
**ரகசியமுரைத் ...... தநுபூதி**
**ரதநிலைதனைத் ...... தருவாயே**
**இகபரமதற் ...... கிறையோனே**
**இயலிசையின்முத் ...... தமிழோனே**
**சகசிரகிரிப் ...... பதிவேளே**
**சரவணபவப் ...... பெருமாளே.**

**36. திருப்புகழ் 943 இறவாமற் பிறவாமல்  (அவிநாசி)**
**இறவாமற் பிறவாமல் எனையாள்சற் ...... குருவாகிப்**
**பிறவாகித் திரமான பெருவாழ்வைத் ...... தருவாயே**
**குறமாதைப் புணர்வோனே குகனேசொற் ...... குமரேசா**
**அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் ...... பெருமாளே.**

**37. திருப்புகழ் 1292 தேன் இயல் சொற்  (பொதுப்பாடல்கள்)**
**தேனியல்சொற் ...... கணிமாதர்**
**சேவைதனைக் ...... கருதாதே**
**யானெனதற் ...... றிடுபோதம்**
**யானறிதற் ...... கருள்வாயே**
**வானவருக் ...... கரசான**
**வாசவனுக் ...... கினியோனே**
**ஆனைமுகற் ...... கிளையோனே**
**ஆறுமுகப் ...... பெருமாளே.**
**----------------------------------------------------------------------------------------------------**

**38. திருப்புகழ் 1294  நாளுமிகுத்த (பொதுப்பாடல்கள்)**
**நாளு மிகுத்த ...... கசிவாகி**
**ஞான நிருத்த ...... மதைநாடும்**
**ஏழை தனக்கு ...... மநுபூதி**
**ராசி தழைக்க ...... அருள்வாயே**
**பூளை யெருக்கு ...... மதிநாக**
**பூண ரளித்த ...... சிறியோனே**

வேளை தனக்கு ...... சிதமாக
வேழ மழைத்த ......பெருமாளே.

## 39. திருப்புகழ் 242. இருப்பவல் திருப்புகழ் ( திருத்தணிகை )

இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்
இடுக்கினை யறுத்திடு ...... மெனவோதும்
இசைத்தமிழ் நடத்தமி ழெனத்துறை விருப்புட
னிலக்கண இலக்கிய ...... கவிநாலுந்
தரிப்பவ ருரைப்பவர் நினைப்பவர் மிகச்சக
தலத்தினில் நவிற்றுத ...... லறியாதே
தனத்தினில் முகத்தினில் மனத்தினி லுருக்கிடு
சமர்த்திகள் மயக்கினில் ...... விழலாமோ
கருப்புவில் வளைத்தணி மலர்க்கணை தொடுத்தியல்
களிப்புட னொளித்தெய்த ...... மதவேளைக்
கருத்தினில் நினைத்தவ னெருப்பெழ நுதற்படு
கனற்கணி லெரித்தவர் ...... கயிலாயப்
பொருப்பினி லிருப்பவர் பருப்பத வுமைக்கொரு
புறத்தினை யளித்தவர் ...... தருசேயே
புயற்பொழில் வயற்பதி நயப்படு திருத்தணி
பொருப்பினில் விருப்புறு ...... பெருமாளே.

## 40. திருப்புகழ் 725 சீதள வாரிஜ ( சிறுவை )

சீதள வாரிஜ பாதாந மோநம
நாரத கீதவி நோதாந மோநம
சேவல மாமயில் ப்ரீதாந மோநம ...... மறைதேடுஞ்
சேகர மானப்ர தாபாந மோநம
ஆகம சாரசொ ரூபாந மோநம
தேவர்கள் சேனைம கீபாந மோநம ...... கதிதோயப்
பாதக நீவுகு டாராந மோநம
மாவசு ரேசக டோராந மோநம
பாரினி லேஜய வீராந மோநம ...... மலைமாது
பார்வதி யாள்தரு பாலாந மோநம
நாவல ஞானம னோலாந மோநம
பாலகு மாரசு வாமீந மோநம ...... அருள்தாராய்
போதக மாமுக னேரான சோதர
நீறணி வேணியர் நேயாப்ர பாகர
பூமக ளார்மரு கேசாம கோததி ...... யிகல்சூரா

**போதக மாமறை ஞானாத யாகர**
**தேனவிழ் நீபந றாவாரு மார்பக**
**பூரண மாமதி போலாறு மாமுக ...... முருகேசா**
**மாதவர் தேவர்க ளோடேமு ராரியு**
**மாமலர் மீதுறை வேதாவு மேபுகழ்**
**மாநில மேழினு மேலான நாயக ...... வடிவேலா**
**வானவ ரூரினும் வீறாகி வீறள**
**காபுரி வாழ்வினு மேலாக வேதிரு**
**வாழ்சிறு வாபுரி வாழ்வேசு ராதிபர் ...... பெருமாளே.**

## 41.திருப்புகழ் 129 கரிய பெரிய ( பழநி )

**கரிய பெரிய எருமை கடவு**
**கடிய கொடிய ...... திரிசூலன்**
**கறுவி யிறுகு கயிறொ டுயிர்கள்**
**கழிய முடுகி ...... யெழுகாலந்**
**திரியு நரியு மெரியு முரிமை**
**தெரிய விரவி ...... யணுகாதே**
**செறிவு மறிவு முறவு மனைய**
**திகழு மடிகள் ...... தரவேணும்**
**பரிய வரையி னரிவை மருவு**
**பரம ரருளு ...... முருகோனே**
**பழன முழவர் கொழுவி லெழுது**
**பழைய பழநி ...... யமர்வோனே**
**அரியு மயனும் வெருவ வுருவ**
**அரிய கிரியை ...... யெறிவோனே**
**அயிலு மயிலு மறமு நிறமும்**
**அழகு முடைய ...... பெருமாளே.**

## 42. திருப்புகழ் 760 கழைமுத்து மாலை ( திருமுட்டம் )

**கழைமுத்து மாலை புயல்முத்து மாலை**
**கரிமுத்து மாலை ...... மலைமேவுங்**
**கடிமுத்து மாலை வளைமுத்து மாலை**
**கடல்முத்து மாலை ...... யரவீனும்**
**அழல்முத்து மாலை யிவைமுற்று மார்பி**
**னடைவொத்து லாவ ...... அடியேன்முன்**
**அடர்பச்சை மாவி லருளிற்பெ ணோடு**
**மடிமைக்கு ழாமொ ...... டருள்வாயே**

மழையொத்த சோதி குயில்தத்தை போலு
    மழலைச்சொ லாயி ...... யெமையீனு
மதமத்த நீல களநித்த நாதர்
    மகிழ்சத்தி யீனு ...... முருகோனே
செழுமுத்து மார்பி னமுதத்தெய் வானை
    திருமுத்தி மாதின் ...... மணவாளா
சிறையிட்ட சூரர் தலைவெட்டி ஞான
    திருமுட்ட மேவு ...... பெருமாளே
அடர்பச்சை மாவி லருளிற்பெ ணோடு
    மடிமைக்கு ழாமொ ...... டருள்வாயே.

## 43. திருப்புகழ்904  என்னால் பிறக்கவும் ( வயலூர் )

என்னால் பிறக்கவும் என்னா லிறக்கவும்
    என்னால் துதிக்கவும் ...... கண்களாலே
என்னா லழைக்கவும் என்னால் நடக்கவும்
    என்னா லிருக்கவும் ...... பெண்டிர்வீடு
என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
    என்னால் சலிக்கவும் ...... தொந்தநோயை
என்னா லெரிக்கவும் என்னால் நினைக்கவும்
    என்னால் தரிக்கவும் ...... இங்குநானார்
கன்னா ருரித்தஎன் மன்னா எனக்குநல்
    கர்ணா மிர்தப்பதம் ...... தந்தகோவே
கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
    கண்ணா டியிற்றடம் ...... கண்டவேலா
மன்னான தக்கனை முன்னாள்மு டித்தலை
    வன்வாளி யிற்கொளும் ...... தங்கரூபன்
மன்னா குறத்தியின் மன்னா வயற்பதி
    மன்னா முவர்க்கொரு ...... தம்பிரானே.

## 44. திருப்புகழ் 8 உனைத் தினம் ( திருப்பரங்குன்றம் )

உனைத் தினம் தொழுது இலன் உனது இயல்பினை
    உரைத்திலன் பல மலர் கொடு உன் அடி இணை
        உறப் பணிந்திலன் ஒரு தவம் இலன் உனது  ...... அருள் மாறா
உளத்துள்  அன்பினர் உறைவிடம் அறிகிலன்
    விருப்பொடு உன் சிகரமும் வலம் வருகிலன்
        உவப்பொடு  உன் புகழ் துதி செய விழைகிலன் ...... மலை போலே

கனைத்து எழும் பகடு அது பிடர் மிசை வரு
கறுத்த வெஞ்சின மறலி தன் உழையினர்
கதித்து அடர்ந்து எறி கயிறு அடு கதை கொடு ...... பொரு போதே
கலக்குறும் செயல் ஒழிவு அற அழிவு உறு
கருத்து நைந்து அலம் உறு பொழுது அளவை கொள்
கணத்தில் என் பயம் அற மயில் முதுகினில் ...... வருவாயே
வினைத் தலம் தனில் அலகைகள் குதி கொள
விழுக்கு உடைந்து மெய் உகு தசை கழுகு உ ண
விரித்த குஞ்சியர் எனும் அவுணரை அமர் ...... புரி வேலா
மிகுத்த பண் பயில் குயில் மொழி அழகிய
கொடிச்சி குங்கும முலை முகடு உழு நறை
விரைத்த சந்தன ம்ருக மத புய வரை ...... உடையோனே
தினம் தினம் சதுர் மறை முனி முறை கொடு
புனல் சொரிந்து அலர் பொதிய விணவர் ஒடு
சினத்தை நிந்தனை செயும் முநிவரர் தொழ ...... மகிழ்வோனே
தெனத்தெ னந்தன என அரி அளி நறை
தெவிட்ட அன்பொடு பருகு உயர் பொழில் திகழ்
திருப்பரங் கிரி தனில் உறை சரவண ...... பெருமாளே.

## 45. திருப்புகழ் 1307 அகரமு மாகி (பழமுதிர்ச்சோலை)

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி ...... அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி ...... அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி ...... வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி ...... வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் ...... வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம ...... முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு ...... மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு ...... பெருமாளே.

## 46. திருப்புகழ் 62 (திருச்செந்தூர்)

தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் ...... கொஞ்சவேநின்
தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடம ணைந்துநின் ...... றன்புபோலக்
கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் ...... சிந்துவேலும்
கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்

கண்குளிர என்றன்முன் ...... சந்தியாவோ
புண்டரிகர் அண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களங் ...... கொண்டபோது
பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கினும்வ ளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் ...... சிந்தைகூரக்
கொண்டநட னம்பதஞ் செந்திலிலும் என்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் ...... கந்தவேளே
கொங்கைகுற மங்கையின் சந்தமணம் உண்டிடுங்
கும்பமுநி கும்பிடுந் ...... தம்பிரானே.

**47. திருப்புகழ் 1124. அகர முதலென உரை செய்**

அகரமுத லெனவுரைசெய் ஐம்பந்தொ ரக்ஷரமும்
அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்
அபரிமித சுருதியும டங்குந்த னிப்பொருளை ...... எப்பொருளுமாய
அறிவையறி பவரறியும் இன்பந்த னைத்துரிய
முடிவைஅடி நடுமுடிவில் துங்கந்த னைச்சிறிய
அணுவையணு வினின்மலமு நெஞ்சுங்கு ணத்ரயமு ...... மற்றதொருகாலம்
நிகழும்வடி வினைமுடிவி லொன்றென்றி ருப்பதனை
நிறைவுகுறை வொழிவறநி றைந்தெங்கு நிற்பதனை
நிகர்பகர அரியதைவி சும்பின்பு ரத்ரயமெ ...... ரித்தபெருமானும்
நிருபகுரு பரகுமர என்றென்று பத்திகொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது ...... ணர்த்தியருள்வாயே
தகுதகுகு தகுதகுகு தந்தந்த குத்தகுகு
டிகுடிகுகு டிகுடிகுகு டிண்டிண்டி குக்குடிகு
தகுதகெண கெணசெகுத தந்தந்த ரித்தகுத ...... தத்ததகுதீதோ
தனதனன தனதனன தந்தந்த னத்ததன
டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டுண்டு டுட்டுடுடு
தரரரர ரிரிரிரிரி யென்றென்றி டக்கையுமு ...... டுக்கையுமியாவும்
மொகுமொகென அதிரமுதி ரண்டம்பி ளக்கநிமிர்
அலகைகர ணமிடவுல கெங்கும்ப்ர மிக்கநட
முடுகுபயி ரவர்பவுரி கொண்டின்பு றப்படுக ...... ளத்திலொருகோடி
முதுகழுகு கொடிகருட னங்கம்பொ ரக்குருதி
நதிபெருக வெகுமுகக வந்தங்கள் நிர்த்தமிட
முரசதிர நிசிசரரை வென்றிந்தி ரற்கரச ...... ளித்தபெருமாளே.

## 48. (பொதுப்பாடல்கள்)

நித்தமுற் றுனைநினைத்து ...... மிகநாடி
  நிட்டைபெற் றியல்கருத்தர் ...... துணையாக
    நத்தியு தமதவத்தி ...... னெறியாலே
      லக்யலக் கணநிருத்த ...... மருள்வாயே
வெற்றிவிக் ரமவரக்கர் ...... கிளைமாள
  விட்டநத் துகரனுக்கு ...... மருகோனே
    குற்றமற் றவருளத்தி ...... லுறைவோனே
      குக்குடக் கொடிதரித்த ...... பெருமாளே.

## 49 .(பொதுப்பாடல்கள்)

இத்தரணி மீதிற் ...... பிறவாதே
எத்தரொடு கூடிக் ...... கலவாதே
முத்தமிழை யோதித் ...... தளராதே
முத்தியடி யேனுக் ...... கருள்வாயே
தத்துவமெய்ஞ் ஞானக் ...... குருநாதா
சத்தசொரு பாபுத் ...... தமுதோனே
நித்தியக்ரு தாநற் ...... பெருவாழ்வே
நிர்த்தஜெக ஜோதிப் ...... பெருமாளே.

## 50. திருத்தணிகை

துப்பா ரப்பா டற்றீ மொய்க்கால்
  சொற்பா வெளிமுக் ...... குணமோகம்
துற்றா யப்பீ றற்றோ லிட்டே
  சுற்றா மதனப் ...... பிணிதோயும்
இப்பா வக்கா யத்தா சைப்பா
  டெற்றே யுலகிற் ...... பிறவாதே
எத்தார் வித்தா ரத்தே கிட்டா
  எட்டா அருளைத் ...... தரவேணும்
தப்பா மற்பா டிச்சே விப்பார்
  தத்தாம் வினையைக் ...... களைவோனே
தற்கா ழிச்சூர் செற்றாய் மெய்ப்போ
  தத்தாய் தணிகைத் ...... தனிவேலா
அப்பா கைப்பா லைப்போல் சொற்கா
  வற்பா வைதனத் ...... தணைவோனே

அத்தா நித்தா முத்தா சித்தா
அப்பா குமரப் ...... பெருமாளே.

## 51. மதுரை

நீதத் துவமாகி .. நேமத் ...... துணையாகிப்
பூதத் தயவான .. போதைத் ...... தருவாயே
நாதத் தொனியோனே .. ஞானக் ...... கடலோனே
கோதற் றமுதானே .. கூடற் ...... பெருமாளே.

## 52. பவானி

கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் ...... கடலேறிப்
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் ...... தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின்
மனமேவு வாலக் ...... குமரேசா
சிலைவேட சேவற் கொடியோனே
திருவாணி கூடற் ...... பெருமாளே.

## 53. திருச்செந்தூர்

தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் ...... நகையாடி
தொண்டு கிழவ னிவனா ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு ...... செவியாகி
வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுக ...... துயர்மேவி
மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை ...... வரவேணும்
எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக ...... அபிராம

இங்கு வருக அரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல ...... வருமாயன்
சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய ...... அடுதீரா
திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் ...... பெருமாளே.

## 54. திருவலஞ்சுழி

மகர குண்டல மீதே மோதுவ
வருண பங்கய மோபூ வோடையில்
மருவு செங்கழு நீரோ நீவிடு ...... வடிவேலோ
மதன்வி டுங்கணை யோவா ளோசில
கயல்கள் கெண்டைக ளோசே லோகொலை
மறலி யென்பவ னோமா னோமது ...... நுகர்கீத
முகர வண்டின மோவான் மேலெழு
நிலவ ருந்துபு ளோமா தேவருண்
முதிய வெங்கடு வோதே மாவடு ...... வகிரோபார்
முடிவெ னுங்கட லோயா தோவென
வுலவு கண்கொடு நேரே சூறைகொள்
முறைய றிந்தப சாசே போல்பவ ...... ருறவாமோ
நிகரில் வஞ்சக மாரீ சாதிகள்
தசமு கன்படை கோடா கோடிய
நிருத ரும்பட வோரே வேவியெ ...... யடுபோர்செய்
நெடிய னங்கனு மானோ டேயெழு
பதுவெ ளங்கவி சேனா சேவித
நிருப னம்பரர் கோமான் ராகவன் ...... மருகோனே
சிகர வும்பர்கள் பாகீ ராதிகள்
பிரபை யொன்றுபி ராசா தாதிகள்
சிவச டங்கமொ டீசா னாதிகள் ...... சிவமோனர்
தெளியு மந்த்ரக லாபா யோகிகள்
அயல்வி ளங்குசு வாமீ காமரு
திருவ லஞ்சுழி வாழ்வே தேவர்கள் ...... பெருமாளே.

## 55. திருக்கழுக்குன்றம்

வேத வெற்பி லேபு னத்தில் மேவி நிற்கு ...... மபிராம
    வேடு வச்சி பாத பத்ம மீது செச்சை ...... முடிதோய
ஆத ரித்து வேளை புக்க ஆறி ரட்டி ...... புயநேய
    ஆத ரத்தோ டாத ரிக்க ஆன புத்தி ...... புகல்வாயே
காது முக்ர வீர பத்ர காளி வெட்க ...... மகுடாமா
    காச முட்ட வீசி விட்ட காலர் பத்தி ...... யிமையோரை
ஓது வித்த நாதர் கற்க வோது வித்த ...... முநிநாண
    ஒரெ ழுத்தி லாறெ ழுத்தை யோது வித்த ...... பெருமாளே.

## 56.திருச்செந்தூர்

பெருக்கச்சஞ் சலித்துக்கந்
    தலுற்றுப்புந் தியற்றுப்பின்
        பிழைப்பற்றுங் குறைப்புற்றும் ...... பொதுமாதர்
ப்ரியப்பட்டங் கழைத்துத்தங்
    கலைக்குட்டங் கிடப்பட்சம்
        பிணித்துத்தந் தனத்தைத்தந் ...... தணையாதே
புரக்கைக்குன் பதத்தைத்தந்
    தெனக்குத்தொண் டுறப்பற்றும்
        புலத்துக்கண் செழிக்கச்செந் ...... தமிழ்பாடும்
புலப்பட்டங் கொடுத்தற்கும்
    கருத்திற்கண் படக்கிட்டும்
        புகழ்ச்சிக்குங் க்ருபைச்சித்தம் ...... புரிவாயே
தருக்கிக்கண் களிக்கத்தெண்
    டனிட்டுத்தண் புனத்திற்செங்
        குறத்திக்கன் புறச்சித்தந் ...... தளர்வோனே
சலிப்புற்றங் குரத்திற்சம்
    ப்ரமித்துக்கொண் டலைத்துத்தன்
        சமர்த்திற்சங் கரிக்கத்தண் ...... டியசூரன்
சிரத்தைச்சென் றறுத்துப்பந்
    தடித்துத்திண் குவட்டைக்கண்
        டிடித்துச்செந் திலிற்புக்கங் ...... குறைவோனே
சிறக்கற்கஞ் செழுத்தத்தந்
    திருச்சிற்றம் பலத்தத்தன்
        செவிக்குப்பண் புறச்செப்பும் ...... பெருமாளே.

## 57. விராலிமலை

மாலாசை கோப மோயாதெ நாளு
 மாயா விகார ...... வழியேசெல்
மாபாவி காளி தானேனு நாத
 மாதா பிதாவு ...... மினிநீயே
நாலான வேத நூலாக மாதி
 நானோதி னேனு ...... மிலைவீணே
நாள்போய் விடாம லாறாறு மீதில்
 ஞானோப தேச ...... மருள்வாயே
பாலா கலார ஆமோத லேப
 பாடீர வாக ...... அணிமீதே
பாதாள பூமி யாதார மீன
 பானீய மேலை ...... வயலூரா
வேலா விராலி வாழ்வே சமூக
 வேதாள பூத ...... பதிசேயே
வீரா கடோர சூராரி யேசெ
 வேளே சுரேசர் ...... பெருமாளே.

## 58. திருத்தணிகை

நினைத்த தெத்தனையிற் ...... றவறாமல்
 நிலைத்த புத்திதனைப் ...... பிரியாமற்
கனத்த தத்துவமுற் ...... றழியாமற்
 கதித்த நித்தியசித் ...... தருள்வாயே
மனித்தர் பத்தர்தமக் ...... கெளியோனே
 மதித்த முத்தமிழிற் ...... பெரியோனே
செனித்த புத்திரரிற் ...... சிறியோனே
 திருத்த ணிப்பதியிற் ...... பெருமாளே.

## 59. சுவாமிமலை

காமியத் தழுந்தி ...... யிளையாதே
 காலர்கைப் படிந்து ...... மடியாதே
ஓமெழுத் திலன்பு ...... மிகவூறி
 ஓவியத் திலந்த ...... மருள்வாயே
தூமமெய்க் கணிந்த ...... சுகலீலா
 சூரனைக் கடிந்த ...... கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த ...... மயில்வீரா
 ஏரகத் தமர்ந்த ...... பெருமாளே.

## 60.திருச்செந்தூர்

விந்ததி னூறி வந்தது காயம்
    வெந்தது கோடி ...... யினிமேலோ
விண்டுவி டாம லுன்பத மேவு
    விஞ்சையர் போல ...... அடியேனும்
வந்துவி நாச முன்கலி தீர
    வண்சிவ ஞான ...... வடிவாகி
வன்பத மேறி யென்களை யாற
    வந்தருள் பாத ...... மலர்தாராய்
எந்தனு ளேக செஞ்சுட ராகி
    யென்கணி லாடு ...... தழல்வேணி
எந்தையர் தேடு மன்பர்ச காய
    ரெங்கள்சு வாமி ...... யருள்பாலா
சுந்தர ஞான மென்குற மாது
    தன்றிரு மார்பி ...... லணைவோனே
சுந்தர மான செந்திலில் மேவு
    கந்தசு ரேசர் ...... பெருமாளே.

## 61. கந்தன்குடி

எந்தன்சட லங்கம்பல பங்கம்படு தொந்தங்களை
    யென்றுந்துயர் பொன்றும்படி ...... யொருநாளே
இன்பந்தரு செம்பொன்கழ லுந்துங்கழல் தந்தும்பினை
    யென்றும்படி பந்தங்கெட ...... மயிலேறி
வந்தும்பிர சண்டம்பகி ரண்டம்புவி யெங்குந்திசை
    மண்டும்படி நின்றுஞ்சுட ...... ரொளிபோலும்
வஞ்சங்குடி கொண்டுந்திரி நெஞ்சன்துக ளென்றுங்கொளும்
    வண்டன்தமி யன்றன்பவம் ...... ஒழியாதோ
தந்தந்தன திந்திந்திமி யென்றும்பல சஞ்சங்கொடு
    தஞ்சம்புரி கொஞ்சுஞ்சிறு ...... மணியாரம்
சந்தந்தொனி கண்டும்புய லங்கன்சிவ னம்பன்பதி
    சம்புந்தொழ நின்றுந்தினம் ...... விளையாடும்
கந்தன்குக னென்றன்குரு வென்றுந்தொழு மன்பன்கவி
    கண்டுய்ந்திட அன்றன்பொடு ...... வருவோனே
கண்டின்கனி சிந்துஞ்சுவை பொங்கும்புனல் தங்குஞ்சுனை
    கந்தன்குடி யின்தங்கிய ...... பெருமாளே.

## 62. திருவீழிமிழலை

எருவாய் கருவாய் தனிலே யுருவா
    யிதுவே பயிராய் ...... விளைவாகி
இவர்போ யவரா யவர்போ யிவரா
    யிதுவே தொடர்பாய் ...... வெறிபோல
ஒருதா யிருதாய் பலகோ டியதா
    யுடனே யவமா ...... யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
    உயிர்கா வெனவோ ...... தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
    முடிமே லிணைதா ...... ளருள்வோனே
முநிவோ ரமரோர் முறையோ வெனவே
    முதுசூ ருரமேல் ...... விடும்வேலா
திருமால் பிரமா வறியா தவர்சீர்
    சிறுவா திருமால் ...... மருகோனே
செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
    திருவீ ழியில்வாழ் ...... பெருமாளே.

## 63.திருப்புகழ் 835 சந்தனந்திமிர்ந்து (எண்கண்)

சந்த னந்தி மிர்ந்த ணைந்து குங்கு மங்க டம்பி லங்கு
    சண்ப கஞ்செ றிந்தி லங்கு ...... திரடோளுந்
தண்டை யஞ்சி லம்ப லம்ப வெண்டை யஞ்ச லன்ச லென்று
    சஞ்சி தஞ்ச தங்கை கொஞ்ச ...... மயிலேறித்
திந்தி மிந்தி மிந்தி மிந்தி தந்த னந்த னந்த னென்று
    சென்ற சைந்து கந்து வந்து ...... க்ருபையோடே
சிந்தை யங்கு லம்பு குந்து சந்த தம்பு கழ்ந்து ணர்ந்து
    செம்ப தம்ப ணிந்தி ரென்று ...... மொழிவாயே
அந்த மந்தி கொண்டி லங்கை வெந்த ழிந்தி டும்ப கண்டன்
    அங்க முங்கு லைந்த ரங்கொள் ...... பொடியாக
அம்ப கும்ப னுங்க லங்க வெஞ்சி னம்பு ரிந்து நின்று
    அம்பு கொண்டு வென்ற கொண்டல் ...... மருகோனே
இந்து வுங்க ரந்தை தும்பை கொன்றை யுஞ்ச லம்பு னைந்தி
    டும்ப ரன்ற னன்பில் வந்த ...... குமரேசா
இந்தி ரன்ப தம்பெ றண்டர் தம்ப யங்க டிந்த பின்பு
    எண்க ணங்க மர்ந்தி ருந்த ...... பெருமாளே.

## 64. திருப்புகழ் 333 கொக்குக்கு ஒக்க (காஞ்சீபுரம்)

கொக்குக் கொக்கத் தலையிற் பற்றுச் சிக்கத் தளகக்
    கொத்துற் றுக்குப் பிணியுற் ...... றவனாகிக்
குக்கிக் கக்கிக் கடையிற் பற்றத் துற்றுக் கழலக்
    கொத்தைச் சொற்கற் றுலகிற் ...... பலபாஷை
திக்கித் திக்கிக் குளறிச் செப்பித் தப்பிக் கெடுபொய்ச்
    செற்றைச் சட்டைக் குடிலைச் ...... சுமைபேணும்
சிக்கற் றுட்குக் கருணைச் சுத்தச் சித்தித் தமிழைத்
    திட்டத் துக்குப் புகலப் ...... பெறுவேனோ
அக்கிட் டிக்கிட் டமருக் கொட்டிக் கிட்டிட் டெதிரிட்
    டத்ரத் தெற்றிக் கடுகப் ...... பொருசூரன்
அச்சுக் கெட்டுப் படைவிட் டச்சப் பட்டுக் கடலுட்
    புக்குப் பட்டுத் துருமத் ...... தடைவாகத்
தக்குத் திக்குத் தறுகட் டொக்குத் தொக்குற் றதுகட்
    கைக்கொட் டிட்டிட் டுடல்சிற் ...... கணமாடிச்
சத்திக் குத்தித் துடியிற் சத்திக் கக்கைச் சமர்செய்ச்
    சத்திக் கச்சிக் குமரப் ...... பெருமாளே

## 65. திருப்புகழ் 107 அபகார நிந்தை (திருவாவி னன்குடிப்)

அபகார நிந்தைபட் ...... டுழலாதே
    அறியாத வஞ்சரைக் ...... குறியாதே
உபதேச மந்திரப் ...... பொருளாலே
    உனைநானி னைந்தருட் ...... பெறுவேனோ
இபமாமு கன்தனக் ...... கிளையோனே
    இமவான்ம டந்தையுத் ...... தமிபாலா
ஜெபமாலை தந்தசற் ...... குருநாதா
    திருவாவி னன்குடிப் ...... பெருமாளே.

## 66 திருப்புகழ் 194 வரதா மணி நீ (பழநி)

வரதா மணிநீ ...... யெனவோரில்
    வருகா தெதுதா ...... னதில்வாரா
திரதா திகளால் ...... நவலோக
    மிடவே கரியா ...... மிதிலேது
சரதா மறையோ ...... தயன்மாலும்
    சகலா கமநூ ...... லறியாத
பரதே வதையாள் ...... தருசேயே
    பழனா புரிவாழ் ...... பெருமாளே.

## 67. திருப்புகழ் 15 தடக்கைப் பங்கயம் (திருப்பரங்குன்றம்)

தடக்கைப் பங்கயம் கொடைக்குக் கொண்டல்தண்
டமிழ்க்குத் தஞ்சமென் ...... றுலகோரைத்
தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்
தளர்ச்சிப் பம்பரந் ...... தனையூசற்
கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்
கலத்தைப் பஞ்சஇந் ...... த்ரியவாழ்வைக்
கணத்திற் சென்றிடந் திருத்தித் தண்டையங்
கழற்குத் தொண்டுகொண் ...... டருள்வாயே
படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சைமன் ...... பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடுந் ...... தனிவேலா
குடக்குத் தென்பரம் பொருப்பிற் றங்குமங்
குலத்திற் கங்கைதன் ...... சிறியோனே
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் ...... பெருமாளே.

## 68. திருப்புகழ் 269 சினத்தவர் முடிக்கும் (திருத்தணிகை)

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவர் ருயிர்க்குஞ் ...... சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் ...... றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் ...... பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் ...... செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் ...... தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் ...... கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் ...... கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் ...... பெருமாளே.

## 69.திருப்புகழ் 525 சரவண பவநிதி  (திருவேங்கடம்)

**சரவண பவநிதி யறுமுக குருபர**
**சரவண பவநிதி யறுமுக குருபர**
**சரவண பவநிதி யறுமுக குருபர ...... எனவோதித்**
**தமிழினி லுருகிய வடியவ ரிடமுறு**
**சனனம ரணமதை யொழிவுற சிவமுற**
**தருபிணி துளவர மெமதுயிர் சுகமுற ...... வருள்வாயே**
**கருணைய விழிபொழி யொருதனி முதலென**
**வருகரி திருமுகர் துணைகொளு மிளையவ**
**கவிதைய முதமொழி தருபவ ருயிர்பெற ...... வருள்நேயா**
**கடலுல கினில்வரு முயிர்படு மவதிகள்**
**கலகமி னையதுள கழியவும் நிலைபெற**
**கதியுமு னதுதிரு வடிநிழல் தருவது ...... மொருநாளே**
**திரிபுர மெரிசெயு மிறையவ ரருளிய**
**குமரச மரபுரி தணிகையு மிகுமுயர்**
**சிவகிரி யிலும்வட மலையிலு முலவிய ...... வடிவேலா**
**தினமுமு னதுதுதி பரவிய அடியவர்**
**மனதுகு டியுமிரு பொருளிலு மிலகுவ**
**திமிரம லமொழிய தினகர னெனவரு ...... பெருவாழ்வே**
**அரவணை மிசைதுயில் நரகரி நெடியவர்**
**மருகனெ னவெவரு மதிசய முடையவ**
**அமலிவி மலிபரை உமையவ ளருளிய ...... முருகோனே**
**அதலவி தலமுதல் கிடுகிடு கிடுவென**
**வருமயி லினிதொளிர் ஷடுமையில் நடுவுற**
**அழகினு டனமரு மரகர சிவசிவ ...... பெருமாளே.**

## 70. திருப்புகழ் 923 மதியால் வித்தகன்  (கருவூர்)

**மதியால்வித் தகனாகி மனதாலுத் ...... தமனாகிப்**
**பதிவாகிச் சிவஞான பரயோகத் ...... தருள்வாயே**
**நிதியேநித் தியமேயென் நினைவேநற் ...... பொருளாயோய்**
**கதியேசொற் பரவேளே கருவூரிற் ...... பெருமாளே.**

## 71.திருப்புகழ் 713 திமிர மாமன  (திருப்போரூர்)

**திமிர மாமன மாமட மடமை யேனிட ராணவ**
**திமிர மேயரி சூரிய ...... திரிலோக**

தினக ராசிவ காரண பனக பூஷண ஆரண
சிவசு தாவரி நாரணன் ...... மருகோனே
குமரி சாமளை மாதுமை அமலி யாமளை பூரணி
குணக லாநிதி நாரணி ...... தருகோவே
குருகு காகும ரேசுர சரவ ணாசக ளேசுர
குறவர் மாமக ளாசைகொள் ...... மணியேசம்
பமர பாரப்ர பாருண படல தாரக மாசுக
பசுர பாடன பாளித ...... பகளேச
பசித பாரண வாரண துவச ஏடக மாவயில்
பரவு பாணித பாவல ...... பரயோக
சமப ராமத சாதல சமய மாறிரு தேவத
சமய நாயக மாமயில் ...... முதுவீர
சகல லோகமு மாசறு சகல வேதமு மேதொழு
சமர மாபுரி மேவிய ...... பெருமாளே.

## 72.திருப்புகழ் 1296 நீலங்கொள் (பொதுப்பாடல்கள்)

நீலங்கொள் மேகத்தின் ...... மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் ...... டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் ...... மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் ...... தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் ...... டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் ...... குலகாலா
நாலந்த வேதத்தின் ...... பொருளோனே
நானென்று மார்தட்டும் ...... பெருமாளே.

## 73.திருப்புகழ் 56 சங்கை தான் ஒன்று (திருச்செந்தூர்)

சங்கைதா னொன்றுதா னின்றியே நெஞ்சிலே
சஞ்சலா ...... ரம்பமாயன்
சந்தொடே குங்குமா லங்க்ருதா டம்பரா
சம்ப்ரமா ...... நந்தமாயன்
மங்கைமார் கொங்கைசே ரங்கமோ கங்களால்
வம்பிலே ...... துன்புறாமே
வண்குகா நின்சொரூ பம்ப்ரகா சங்கொடே
வந்துநீ ...... யன்பிலாள்வாய்
கங்கைசூ டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே ...... விஞ்சையூரா

கம்பியா திந்த்ரலோ கங்கள்கா வென்றவா
    கண்டலே ...... சன்சொல்வீரா
செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் பொன்றவே
    சென்றுமோ ...... தும்ப்ரதாபா
செங்கண்மால் பங்கஜா னன்தொழா நந்தவேள்
    செந்தில்வாழ் ...... தம்பிரானே.

## 74. திருப்புகழ் 31 இயலிசையில் உசித (திருச்செந்தூர்)

இயலிசையி லுசித வஞ்சிக் ...... கயர்வாகி
    இரவுபகல் மனது சிந்தித் ...... துழலாதே
உயர்கருணை புரியு மின்பக் ...... கடல்மூழ்கி
    உனையெனது ளறியு மன்பைத் ...... தருவாயே
மயில்தகர்க லிடைய ரந்தத் ...... தினைகாவல்
    வனசகுற மகளை வந்தித் ...... தணைவோனே
கயிலைமலை யனைய செந்திற் ...... பதிவாழ்வே
    கரிமுகவ னிளைய கந்தப் ...... பெருமாளே.

## 75.திருப்புகழ் 167 திடமிலி சற்குணமிலி (பழநி)

திடமிலிசற் குணமிலிநற் றிறமிலியற் ...... புதமான
    செயலிலிமெய்த் தவமிலிநற் செபமிலிசொர்க் ...... கமுமீதே
இடமிலிகைக் கொடையிலிசொற் கியல்பிலிநற் ...... றமிழ்பாட
    இருபதமுற் றிருவினையற் றியல்கதியைப் ...... பெறவேணும்
கெடுமதியுற் றிடுமசுரக் கிளைமடியப் ...... பொரும்வேலா
    கிரணகுறைப் பிறையறுகக் கிதழ்மலர்கொக் ...... கிறகோடே
படர்சடையிற் புனைநடனப் பரமர்தமக் ...... கொருபாலா
    பலவயலிற் றரளநிறைப் பழநிமலைப் ...... பெருமாளே

## 76.திருப்புகழ் 225 நிறைமதி முகமெனும் (சுவாமிமலை)

நிறைமதி முகமெனு ...... மொளியாலே
    நெறிவிழி கணையெனு ...... நிகராலே
உறவுகொள் மடவர்க ...... ளுறவாமோ
    உனதிரு வடியினி ...... யருள்வாயே
மறைபயி லரிதிரு ...... மருகோனே
    மருவல ரசுரர்கள் ...... குலகாலா

குறமகள் தனைமண ...... மருள்வோனே
குருமலை மருவிய ...... பெருமாளே.

## 77. திருப்புகழ் 830 விழுதாதெனவே (நாகப்பட்டினம்)

விழுதா தெனவே கருதா துடலை
வினைசேர் வதுவே ...... புரிதாக
விருதா வினிலே யுலகா யதமே
லிடவே மடவார் ...... மயலாலே
அழுதா கெடவே அவமா கிடநா
ளடைவே கழியா ...... துனையோதி
அலர்தா ளடியே னுறவாய் மருவோ
ரழியா வரமே ...... தருவாயே
தொழுதார் வினைவே ரடியோ டறவே
துகள்தீர் பரமே ...... தருதேவா
சுரர்பூபதியே கருணா லயனே
சுகிர்தா வடியார் ...... பெருவாழ்வே
எழுதா மறைமா முடிவே வடிவே
லிறைவா எனையா ...... ளுடையோனே
இறைவா எதுதா வதுதா தனையே
இணைநா கையில்வாழ் ...... பெருமாளே.

## 78.திருப்புகழ் 994 வேத வித்தகா (பொதுப்பாடல்கள்)

வேத வித்தகா சாமீ நமோநம
வேல்மி குத்தமா சூரா நமோநம
வீம சக்ரயூ காளா நமோநம ...... விந்துநாத
வீர பத்மசீர் பாதா நமோநம
நீல மிக்ககூ தாளா நமோநம
மேக மொத்தமா யூரா நமோநம ...... விண்டிடாத
போத மொத்தபேர் போதா நமோநம
பூத மற்றுமே யானாய் நமோநம
பூர ணத்துளே வாழ்வாய் நமோநம ...... துங்கமேவும்
பூத ரத்தெலாம் வாழ்வாய் நமோநம
ஆறி ரட்டிநீள் தோளா நமோநம
பூஷ ணத்துமா மார்பா நமோநம ...... புண்டரீக
மீதி ருக்குநா மாதோடு சேயிதழ்
மீதி ருக்குமே ரார்மாபு லோமசை
வீர மிக்கஏழ் பேர்மாதர் நீடினம் ...... நின்றுநாளும்

வேத வித்தகீ வீமா விராகிணி
    வீறு மிக்கமா வீணா கரேமக
        மேரு வுற்றுவாழ் சீரே சிவாதரெ ...... யங்கராகீ
ஆதி சத்திசா மாதேவி பார்வதி
    நீலி துத்தியார் நீணாக பூஷணி
        ஆயி நித்தியே கோடீர மாதவி ...... யென்றுதாழும்
ஆர்யை பெற்றசீ ராளா நமோநம
    சூரை யட்டுநீள் பேரா நமோநம
        ஆர ணத்தினார் வாழ்வே நமோநம ...... தம்பிரானே.

### 79. திருப்புகழ் 958 பரவு நெடுங்கதிர் (மதுரை)

பரவு நெடுங்கதி ருலகில் விரும்பிய
    பவனி வரும்படி ...... யதனாலே
பகர வளங்களு நிகர விளங்கிய
    இருளை விடிந்தது ...... நிலவாலே
வரையினி லெங்கணு முலவி நிறைந்தது
    வரிசை தரும்பத ...... மதுபாடி
வளமொடு செந்தமி ழுரைசெய அன்பரு
    மகிழ வரங்களு ...... மருள்வாயே
அரஹர சுந்தர அறுமுக என்றுனி
    அடியர் பணிந்திட ...... மகிழ்வோனே
அசலநெ டுங்கொடி அமையுமை தன்சுத
    குறமக ளிங்கித ...... மணவாளா
கருதரு திண்புய சரவண குங்கும
    களபம ணிந்திடு ...... மணிமார்பா
கனக மிகும்பதி மதுரை வளம்பதி
    யதனில் வளர்ந்தருள் ...... பெருமாளே.

### 80. திருப்புகழ் 1291 துள்ளு மதவேள் (பொதுப்பாடல்கள்)

துள்ளுமத வேள்கைக் ...... கணையாலே
தொல்லைநெடு நீலக் ...... கடலாலே
மெள்ளவரு சோலைக் ...... குயிலாலே
மெய்யுருகு மானைத் ...... தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் ...... தெளிவோனே
செய்யகும ரேசத் ...... திறலோனே
வள்ளல்தொழு ஞானக் ...... கழலோனே
வள்ளிமண வாளப் ...... பெருமாளே.

## 81.திருப்புகழ் 705 ஏறு ஆனாலே (கோடைநகர்)

ஏறா னாலே நீறாய் மாயா
    வேளே வாசக் ...... கணையாலே
ஏயா வேயா மாயா வேயா
    லாமே ழோசைத் ...... தொளையாலே
மாறா யூறா யீறாய் மாலாய்
    வாடா மானைக் ...... கழியாதே
வாராய் பாராய் சேரா யானால்
    வாடா நீபத் ...... தொடைதாராய்
சீறா வீறா ஈரேழ் பார்சூழ்
    சீரார் தோகைக் ...... குமரேசா
தேவா சாவா மூவா நாதா
    தீரா கோடைப் ...... பதியோனே
வேறாய் மாறா யாறா மாசூர்
    வேர்போய் வீழப் ...... பொருதோனே
வேதா போதா வேலா பாலா
    வீரா வீரப் ...... பெருமாளே.

## 82. திருப்புகழ் 134 கருவின் உருவாகி (பழநி)

கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
    கலைகள்பல வேதெ ரிந்து ...... மதனாலே
கரியகுழல் மாதர் தங்க ளடிசுவடு மார்பு தைந்து
    கவலைபெரி தாகி நொந்து ...... மிகவாடி
அரகரசி வாய வென்று தினமுநினை யாமல் நின்று
    அறுசமய நீதி யொன்று ...... மறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள்தலை வாசல் நின்று
    அநுதினமு நாண மின்றி ...... யழிவேனோ
உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்கர்
    உலகளவு மால்ம கிழ்ந்த ...... மருகோனே
உபயகுல தீப துங்க விருதுகவி ராஜ சிங்க
    உறைபுகலி யூரி லன்று ...... வருவோனே
பரவைமனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற
    பரமனரு ளால்வ ளர்ந்த ...... குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீள வென்று
    பழநிமலை மீதில் நின்ற ...... பெருமாளே.

## 83. திருப்புகழ் 818 பாலோ தேனோ பாகோ (திருவாரூர்)

பாலோ தேனோ பாகோ வானோர்
பாரா வாரத் ...... தமுதேயோ
பாரோர் சீரோ வேளேர் வாழ்வோ
பானோ வான்முத் ...... தெனநீளத்
தாலோ தாலே லோபா டாதே
தாய்மார் நேசத் ...... துனுசாரந்
தாரா தேபே ரீயா தேபே
சாதே யேசத் ...... தகுமோதான்
ஆலோல் கேளா மேலோர் நாண்மா
லானா தேனற் ...... புனமேபோய்
ஆயாள் தாள்மேல் வீழா வாழா
ஆளா வேளைப் ...... புகுவோனே
சேலோ டேசே ராரால் சாலார்
சீரா ரூரிற் ...... பெருவாழ்வே
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் ...... பெருமாளே.

## 84. திருப்புகழ் 110 அவனிதனிலே (பழநி)

அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து ...... இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து ...... பதினாறாய்
சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து ...... துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்ற ...... னடிசேராய்
மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த ...... மகதேவர்
மனமகிழ வேய ணைந்து ஒருபுறம தாக வந்த
மலைமகள்கு மார துங்க ...... வடிவேலா
பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த ...... கழல்வீரா
பரமபத மேசெ றிந்த முருகனென வேயு கந்து
பழநிமலை மேல மர்ந்த ...... பெருமாளே.

**85.திருப்புகழ் 206 எந்தத் திகையினும்  (சுவாமிமலை)**

எந்தத் திகையினு மலையினு முவரியி
னெந்தப் படியினு முகடினு முளபல
எந்தச் சடலமு முயிரியை பிறவியி ...... னுழலாதே
இந்தச் சடமுட னுயிர்நிலை பெறநளி
னம்பொற் கழலிணை களில்மரு மலர்கொடு
என்சித் தமுமன முருகிநல் சுருதியின் ...... முறையோடே
சந்தித் தரஹர சிவசிவ சரணென
கும்பிட் டிணையடி யவையென தலைமிசை
தங்கப் புளகித மெழஇரு விழிபுனல் ...... குதிபாயச்
சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமு
னந்தத் திருநட மிடுசர ணழகுற
சந்தச் சபைதனி லெனதுள முருகவும் ...... வருவாயே
தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி
தந்தத் தனதன டுடுடுடு டமடம
துங்கத் திசைமலை யுவரியு மறுகச ...... லரிபேரி
துன்றச் சிலைமணி கலகல கலினென
சிந்தச் சுரர்மல ரயன்மறை புகழ்தர
துன்புற் றவுணர்கள் நமனுல குறவிடு ...... மயில்வேலா
கந்தச் சடைமுடி கனல்வடி வடலணி
யெந்தைக் குயிரெனு மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி யுமையரு ...... ளிளையோனே
கஞ்சப் பதமிவர் திருமகள் குலமகள்
அம்பொற் கொடியிடை புணரரி மருகநல்
கந்தப் பொழில்திகழ் குருமலை மருவிய ...... பெருமாளே.

**86.திருப்புகழ் 1058 பொதுவதாய்த் தனி  (பொதுப்பாடல்கள்)**

பொதுவ தாய்த்தனி முதல தாய்ப்பகல்
இரவு போய்ப்புகல் ...... கின்றவேதப்
பொருள தாய்ப்பொருள் முடிவ தாய்ப்பெரு
வெளிய தாய்ப்புதை ...... வின்றியீறில்
கதிய தாய்க்கரு தரிய தாய்ப்பரு
கமுத மாய்ப்புல ...... னைந்துமாயக்
கரண மாய்த்தெனை மரண மாற்றிய
கருணை வார்த்தையி ...... ருந்தவாறென்
உததி கூப்பிட நிருத ரார்ப்பெழ
உலகு போற்றிட ...... வெங்கலாப

ஒருப ராக்ரம துரக மோட்டிய
வுரவ கோக்கிரி ...... நண்பவானோர்
முதல்வ பார்ப்பதி புதல்வ கார்த்திகை
முலைகள் தேக்கிட ...... வுண்டவாழ்வே
முளரி பாற்கடல் சயில மேற்பயில்
முதிய மூர்த்திகள் ...... தம்பிரானே.

## 87.திருப்புகழ் 521 புமி அதனில் (கயிலைமலை)

புமியதனிற் ......ப்ரபுவான
புகலியில்வித் ...... தகர்போல
அமிர்தகவித் ...... தொடைபாட
அடிமைதனக் ...... கருள்வாயே
சமரிலெதிர்த் ...... தசுர்மாளத்
தனியயில்விட் ...... டருள்வோனே
நமசிவயப் ...... பொருளானே
ரசதகிரிப் ...... பெருமாளே.

## 88. திருப்புகழ் 538 குடிவாழ்க்கை (வள்ளிமலை)

குடிவாழ்க்கை யன்னை மனையாட்டி பிள்ளை
குயில்போற்ப்ர சன்ன ...... மொழியார்கள்
குலம்வாய்த்த நல்ல தனம்வாய்த்த தென்ன
குருவார்த்தை தன்னை ...... யுணராதே
இடநாட்கள் வெய்ய நமனீட்டி தொய்ய
இடர்கூட்ட இன்னல் ...... கொடுபோகி
இடுகாட்டி லென்னை எரியூட்டு முன்னு
னிருதாட்கள் தம்மை ...... யுணர்வேனோ
வடநாட்டில் வெள்ளி மலைகாத்து புள்ளி
மயில்மேற்றி கழ்ந்த ...... குமரேசா
வடிவாட்டி வள்ளி அடிபோற்றி வள்ளி
மலைகாத்த நல்ல ...... மணவாளா
அடிநாட்கள் செய்த பிழைநீக்கி யென்னை
யருள்போற்றும் வண்மை ...... தரும்வாழ்வே
அடிபோற்றி யல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல ...... பெருமாளே.

## 89. திருப்புகழ் 611 ஆதிமக மாயி (ஊதிமலை)

ஆதிமக மாயி யம்பை தேவிசிவ னார்ம கிழ்ந்த
ஆவுடைய மாது தந்த ...... குமரேசா
ஆதரவ தாய்வ ருந்தி யாதியரு ணேச ரென்று
ஆளுமுனை யேவ ணங்க ...... அருள்வாயே
பூதமது வான வைந்து பேதமிட வேய லைந்து
பூரணசி வாக மங்க ...... ளறியாதே
பூணுமுலை மாதர் தங்கள் ஆசைவகை யேநி னைந்து
போகமுற வேவி ரும்பு ...... மடியேனை
நீதயவ தாயி ரங்கி நேசவரு ளேபு ரிந்து
நீதிநெறி யேவி ளங்க ...... வுபதேச
நேர்மைசிவ னார்தி கழ்ந்த காதிலுரை வேத மந்த்ர
நீலமயி லேறி வந்த ...... வடிவேலா
ஓதுமறை யாக மஞ்சொல் யோகமது வேபு ரிந்து
ஊழியுணர் வார்கள் தங்கள் ...... வினைதீர
ஊனுமுயி ராய்வ ளர்ந்து ஓசையுடன் வாழ்வு தந்த
ஊதிமலை மீது கந்த ...... பெருமாளே.

## 90. திருப்புகழ் 1120 பத்து ஏழு எட்டு (பொதுப்பாடல்கள்)

பத்தே ழெட்டீ ரெட்டேழ் ரட்டால்
வைத்தே பத்திப் ...... படவேயும்
பைப்பீ றற்கூ ரைப்பா சத்தா
சற்கா ரத்துக் ...... கிரைதேடி
எத்தே சத்தோ டித்தே சத்தோ
டொத்தேய் சப்தத் ...... திலுமோடி
எய்த்தே நத்தா பற்றா மற்றா
திற்றே முக்கக் ...... கடவேனோ
சத்தே முற்றா யத்தா னைச்சூர்
கற்சா டிக்கற் ...... பணிதேசா
சட்சோ திப்பூ திப்பா லத்தா
அக்கோ டற்செச் ...... சையமார்பா
முத்தா பத்தா ரெட்டா வைப்பா
வித்தா முத்தர்க் ...... கிறையோனே
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் ...... பெருமாளே

**91. திருப்புகழ் 1306 கும்பகோணம் (க்ஷேத்திரக் கோவை)**

கும்ப கோணமொ டாரூர் சிதம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூர மம்பெறு ...... சிவகாசி
கொந்து லாவிய ராமே சுரந்தனி
வந்து பூஜைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர் பரங்கிரி ...... தனில்வாழ்வே
செம்பு கேசுர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ ...... செகநாதஞ்
செஞ்சொ லேரக மாவா வினன்குடி
குன்று தோறுடன் மூதூர் விரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடு வஞ்சியில் ...... வருதேவே
கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்பு லாவிய காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ தந்திர ...... வயலூரா
கந்த மேவிய போரூர் நடம்புரி
தென்சி வாயமு மேயா யகம்படு
கண்டி யூர்வரு சாமீக டம்பணி ...... மணிமார்பா
எம்பி ரானொடு வாதாடு மங்கையர்
உம்பர் வாணிபொ னீள்மால் சவுந்தரி
எந்த நாள்தொறு மேர்பாக நின்றுறு ...... துதியோதும்
இந்தி ராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையு மாலாய்ம ணந்துல
கெங்கு மேவிய தேவால யந்தொறு ...... பெருமாளே.

**92. திருப்புகழ் 779 உரத்துறை போத (வைத்தீசுரன் கோயில்)**

உரத்துறை போதத் ...... தனியான
உனைச்சிறி தோதத் ...... தெரியாது
மரத்துறை போலுற் ...... றடியேனும்
மலத்திருள் மூடிக் ...... கெடலாமோ
பரத்துறை சீலத் ...... தவர்வாழ்வே
பணித்தடி வாழ்வுற் ...... றருள்வோனே
வரத்துறை நீதர்க் ...... கொருசேயே
வயித்திய நாதப் ...... பெருமாளே.

## 93.திருப்புகழ் 932 இருவினைப் பிறவி (திருப்பாண்டிக்கொடுமுடி)

இருவினைப் பிறவிக் ...... கடல்மூழ்கி
இடர்கள்பட் டலையப் ...... புகுதாதே
திருவருட் கருணைப் ...... ப்ரபையாலே
திரமெனக் கதியைப் ...... பெறுவேனோ
அரியயற் கறிதற் ...... கரியானே
அடியவர்க் கெளியற் ...... புதநேயா
குருவெனச் சிவனுக் ...... கருள்போதா
கொடுமுடிக் குமரப் ...... பெருமாளே.

## 94. திருப்புகழ் 1318 வாதினை அடர்ந்த (பழமுதிர்ச்சோலை)

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து ...... தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபதம ணிந்து ...... பணியேனே
ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று ...... தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப ...... தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம லைந்து ...... திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று ...... தொழுகேனே
சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து ...... எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற ...... பெருமாளே.

## 95. திருப்புகழ் 1268 மதன் இக்கு அது (பொதுப்பாடல்கள்)

மதனிக் கதுகொடு பதுமப் புதுமலர்
மலையப் படவிடு ...... வலியாலே
வனமுற் றினவளை யினநித் திலமலை
வலையத் துகள்வளை ...... கடலாலே
விதனப் படுமதி வதனக் கொடியற
வெருவிப் பரிமள ...... அணைமீதே
மெலியக் கலைதலை குலையத் தகுமினி
விரையக் குரவலர் ...... தரவேணும்

புதனைச் சதுமுக விதியச் சுதனெதிர்
    புனைவித் தவர்தொழு ...... கழல்வீரா
பொருகைச் சரிவரி பெருகச் செறிவுறு
    புனமெய்க் குறமகள் ...... மணவாளா
முதுநற் சரவண மதனிற் சததள
    முளரிப் பதிதனி ...... லுறைவோனே
முதுமைக் கடலட ரசுரப் படைகெட
    முடுகிப் பொரவல ...... பெருமாளே.

## 96. திருப்புகழ் 675 புவிபுனல் காலும் (திருவாலங்காடு)

புவிபுனல் காலுங் காட்டி சிகியொடு வானுஞ் சேர்த்தி
    புதுமன மானும் பூட்டி ...... யிடையூடே
பொறிபுல னீரைந் தாக்கி கருவிகள் நாலுங் காட்டி
    புகல்வழி நாலைந் தாக்கி ...... வருகாயம்
பவவினை நூறுங் காட்டி சுவமதி தானுஞ் சூட்டி
    பசுபதி பாசங் காட்டி ...... புலமாயப்
படிமிசை போவென் றோட்டி அடிமையை நீவந் தேத்தி
    பரகதி தானுங் காட்டி ...... யருள்வாயே
சிவமய ஞானங் கேட்க தவமுநி வோரும் பார்க்க
    திருநட மாடுங் கூத்தர் ...... முருகோனே
திருவளர் மார்பன் போற்ற திசைமுக னாளும் போற்ற
    ஜெகமொடு வானங் காக்க ...... மயிலேறிக்
குவடொடு சூரன் தோற்க எழுகடல் சூதந் தாக்கி
    குதர்வடி வேலங் கோட்டு ...... குமரேசா
குவலயம் யாவும் போற்ற பழனையி லாலங் காட்டில்
    குறமகள் பாதம் போற்று ...... பெருமாளே.

## 97. திருப்புகழ் 660 கள்ளம் உள்ள (வெள்ளிகரம்)

கள்ள முள்ள வல்ல வல்லி
    கையி லள்ளி ...... பொருளீயக்
கல்லு நெல்லு வெள்ளி தெள்ளு
    கல்வி செல்வர் ...... கிளைமாய
அள்ளல் துள்ளி ஐவர் செல்லு
    மல்லல் சொல்ல ...... முடியாதே
ஐய ரைய மெய்யர் மெய்ய
    ஐய செய்ய ...... கழல்தாராய்

வள்ளல் புள்ளி நவ்வி நல்கு
வள்ளி கிள்ளை ...... மொழியாலே
மைய லெய்து மைய செய்யில்
வையில் வெள்வ ...... ளைகளேற
மெள்ள மள்ளர் கொய்யு நெல்லின்
வெள்ள வெள்ளி ...... நகர்வாழ்வே
வெய்ய சைய வில்லி சொல்லை
வெல்ல வல்ல ...... பெருமாளே.

98.திருப்புகழ் 170 நாத விந்து (பழநி)
நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம ...... வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம ...... பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம ...... கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம ...... அருள்தாராய்
ஈத லும்பல கோலா லபூஜையும்
ஓத லுங்குண ஆசா ரநீதியும்
ஈர முங்குரு சீர்பா தசேவையு ...... மறவாத
ஏழ்த லம்புகழ் காவே ரியால்விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடா ளுநாயக ...... வயலூரா
ஆத ரம்பயி லாரூ ரர்தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதே றிமா...... கயி லையிலேகி
ஆதி யந்தவு லாவா சுபாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வானதேவர்கள் ...... பெருமாளே.

**99.திருப்புகழ் 1328 ஏறுமயிலேறி (திருவருணை)**

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

**100. திருப்புகழ் 1326 ஒருரு வாகி (திருவெழுகூற்றிருக்கை)**

ஒருரு வாகிய தாரகப் பிரமத்
தொருவகைத் தோற்றத் திருமர பெய்தி
ஒன்றா யொன்றி யிருவரிற் றோன்றி மூவா தாயினை
இருபிறப் பாளரி னொருவ னாயினை
ஓராச் செய்கையி னிருமையின் முன்னாள்
நான்முகன் குடுமி இமைப்பினிற் பெயர்த்து
மூவரும் போந்து இருதாள் வேண்ட
ஒருசிறை விடுத்தனை
ஒருநொடி யதனில் இருசிறை மயிலின்
முந்நீ ருடுத்த நானிலம் அஞ்ச நீவலஞ் செய்தனை
நால்வகை மருப்பின் மும்மதத் திருசெவி
ஒருகைப் பொருப்பன் மகளை வேட்டனை
ஒருவகை வடிவினி லிருவகைத் தாகிய
மும்மதன் தனக்கு மூத்தோ னாகி
நால்வாய் முகத்தோன் ஐந்துகைக் கடவுள்
அறுகு சூடிக் கிளையோ னாயினை
ஐந்தெழுத் ததனில் நான்மறை யுணர்த்து
முக்கட் சுடரினை இருவினை மருந்துக்
கொருகுரு வாயினை
ஒருநாள் உமையிரு முலைப்பா லருந்தி
முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்
ஐம்புலக் கிழவன் அறுமுக னிவனென
எழில்தரு மழகுடன் கழுமலத் துதித்தனை
அறுமீன் பயந்தனை ஐந்தரு வேந்தன்
நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்
டன்றி லங்கிரி யிருபிள வாக ஒருவேல் விடுத்தனை

**காவிரி வடகரை மேவிய குருகிரி இருந்த**
**ஆறெழுத் தந்தணர் அடியிணை போற்ற**
**ஏரகத் திறைவ னென இருந்தனையே.**

**ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிய சண்முக கவசம்**

**அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருள (து) ஆகித்**
**தொண்டர்கள் குருவுமாகித் துகள் அறு தெய்வமாகி**
**எண்திசை போற்ற நின்ற என்அருள் ஈசன் ஆன**
**திண்திறள் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க. --- (1)**

**ஆதியாம் கயிலைச் செல்வன்அணிநெற்றி தன்னைக் காக்க**
**தாதவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க**
**சோதியாம் தணிகை ஈசன் துரிசுஇலா விழியைக் காக்க**
**நாதனாம் கார்த்தி கேயன் நாசியை நயந்து காக்க. --- (2)**

**இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க, வாயை**
**முருகவேள் காக்க, நாப்பல் முழுதும்நல் குமரன் காக்க**
**துரிசஅறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க**
**திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க. --- (3)**

**ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க**
**தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க**
**ஆசிலா மார்பை ஈராறு ஆயுதன் காக்க, எந்தன்**
**ஏசிலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக்கோன் காக்க. --- (4)**

**உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க**
**தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க**
**புறம்கையை அயிலோன் காக்க, பொறிக்கர விரல்கள் பத்தும்**
**பிறங்கு மால்மருகன்காக்க, பின்முதுகைச் சேய் காக்க. --- (5)**

**ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்த்தியோன் காக்க, வம்புத்**
**தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க, குய்ய**
**நாணினை அங்கி கௌரிநந்தனன் காக்க, பீஜ**
**ஆணியை கந்தன்காக்க, அறுமுகன் குதத்தைக் காக்க. --- (6)**

**எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க**

அம்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண நேச ஆசான் திமிரு முன் தொடையைக் காக்க. --- (7)

ஏரகத் தேவன்என்தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க. --- (8)

ஐயுறு மலையன்பாதத்து அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாத பரன், அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும், ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க. --- (9)

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூத ப்ரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க, கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க. --- (10)

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணிவில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடி பரசு ஈட்டி யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சின்,
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க. --- (11)

ஔவியமுளர் ஊன் உண்போர் அசடர் பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவா ராயின், சராசரம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கைஅயில் காக்க காக்க. --- (12)

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோணாய் குரங்கு கோல மார்ச்சாலம் சம்பு
நடையுடை எதனா லேனும் நான் இடர்ப் பட்டி டாமல்
சடுதியில் வடிவேல் காக்க சானவிமுளை வேல் காக்க. --- (13)

ஙகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க, வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடை ஓந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி

உகமிசை இவையால், எற் குழர் ஊறுஇலாது ஐவேல் காக்க. --- (14)

சலத்தில் உய்வன்மீன் ஐறு, தண்டுடைத் திருக்கை, மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால், நான் வருத்தம் கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க, பாவகி கூர்வேல் காக்க. --- (15)

ஞமலியம் பரியன்கைவேல், நவக்கிரகக்கோள் காக்க
சுமவிழி நோய்கள், தந்த சூலை, ஆக்கிராண ரோகம்,
திமிர்கழல் வாதம், சோகை, சிரமடி கர்ண ரோகம்
எமை அணுகாமலே பன்னிருபுயன் சயவேல் காக்க. --- (16)

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி, கண்ட மாலை
குமுறு விப்புருதி, குன்மம், குடல்வலி, ஈழை காசம்,
நிமிரொணா(து) இருத்தும்வெட்டை, நீர்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க. --- (17)

இணக்கம் இல்லாத பித்த எரிவு, மாசுரங்கள், கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம், மூலவெண்முளை, தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்த
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும்சக்தி வடிவேல் காக்க. --- (18)

தவனமா ரோகம், வாதம், சயித்தியம், அரோசகம், மெய்
சுவறவே செய்யும் மூலச்சூடு, இளைப்பு, உடற்று விக்கல்,
அவதிசெய் பேதி சீழ்நோய், அண்டவாதங்கள், சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க. --- (19)

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு, சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழுநோய் கக்கல்
இமைக்குமுன் உறு வலிப்போடு எழுபுடைப்பகந்த ராதி
இமைப்பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க. --- (20)

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர், வரினும் என்னை
ஒல்லையில் தார காரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க. --- (21)

மண்ணிலும் மரத்தின்மீது மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும்சாரி செய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறு எந்த இடத்தும் என்னை
நண்ணிவந்து அருள் ஆர்சஷ்டி நாதன் வேல் காக்க காக்க. --- (22)

யகரமேபோல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவ மோலி திகழ் ஐவேல் கீழ்மேல் காக்க. --- (23)

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க, அங்கி
விஞ்சிடு திசையில் ஞான வீரன் வேல் காக்க, தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோன் இகலுடைக் கரவேல் காக்க. --- (24)

லகரமே போல் காளிங்கன்நல்லுடல் நெளிய நின்று
தகர மர்த்தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்,
நிகழ்எனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க, மேற்கில்
இகல் அயில்காக்க, வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க. --- (25)

வடதிசை தன்னில் ஈசன்மகன்அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கும்ஞான்றும் நவில்கையில் நிமிர்கையில், கீழ்க்
கிடக்கையில் தூங்குஞான்றும் கிரிதுளைத்துள வேல்காக்க. --- (26)

இழந்துபோகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்,
வழங்கும் நல் ஊண் உண்போதும் மால்விளையாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும்குணத்தோடே காக்க, திடமுடன் மயிலும் காக்க. --- (27)

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலை, முன்எல் ஓம் சிவ சாமி காக்க
தெளிநடு பிற்பகல் கால், சிவகுரு நாதன் காக்க. --- (28)

இறகுடைக்கோழித் தோகைக்கு இறைமுன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப்பகைத்தே, திகழ்பின் இராவில் காக்க

நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க. --- (29)

இனம்எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவண பவனார் காக்க
நனி அநுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவோடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்கவந்தே. --- (30)

## ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் அருளிய திருச்செந்தூர் கந்தர் கலி வெண்பா

பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் - தேமேவு
நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய் - ஆதிநடு --- 1

அந்தம் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய் - வந்த
குறியும் குணமுமொரு கோலமுமற்று எங்கும்
செறியும் பரம சிவமாய் - அறிவுக்கு --- 2

அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்கு எட்டா வடிவாய்த் - தனாதருளின்
பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய் - எஞ்சாத --- 3

பூரணமாய் நித்தமாய்ப் போக்குவரவும் புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித் - தாரணியில்
இந்திரசாலம் புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வதுபோல் - முந்தும் --- 4

கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த் - திரிகரணம்
ஆகவரும் இச்சை அறிவு இயற்ற லால் இலய
போகஅதி காரப் பொருளாகி - ஏகத்து --- 5

உருவும் அருவும் உருஅருவும் ஆகிப்

**பருவ வடிவம் பலவாய் - இருள்மலத்துள்**
**மோகமுறும் பல்லுயிர்க்கு முத்திஅளித் தற்குமல**
**பாகமுறவே கடைக்கண் பாலித்துத் - தேகமுறத் --- 6**

**தந்த அருவுருவம் சார்ந்தவிந்து மோகினிமான்**
**பெந்த முறவே பிணிப்பித்து - மந்த்ரமுதல்**
**ஆறத்து வாவும் அண்டத்து ஆர்ந்தஅத்து வாக்களும்முற்**
**கூறத் தகும் சிமிழ்ப்பில் கூட்டுவித்து - மாறிவரும் --- 7**

**ஈரிரண்டு தோற்றத்து எழுபிறப்புள் யோனிஎன்பான்**
**ஆரவந்த நான்குநூ றாயிரத்துள் - தீர்வரிய**
**கன்மத்துக்கு ஈடாய்க் கறங்கும் சகடமும் போற்**
**சென்மித்து உழலத் திரோதித்து - வெந்நிரய --- 8**

**சொர்க்காதி போகமெலாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்**
**நற்காரணம் சிறிது நண்ணுதலும் - தர்க்கமிடும்**
**தொன்னூல் பரசமயம் தோறும் அதுவதுவே**
**நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து - முன்னூல் --- 9**

**விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைத்**
**சரியைகிரி யாயோகம் சார்வித்து - அருள்பெருகு**
**சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து**
**ஆலோகம் தன்னை அகற்றுவித்து - நால்வகையாம் --- 10**
**Back to Top**

**சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்**
**ஒத்துவரும் காலம் உளவாகிப் - பெத்த**
**மலபரி பாகம் வருமளவில் பன்னாள்**
**அலமருதல் கண்ணுற்று அருளி - உலவாது --- 11**

**அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா**
**நெறியில் செறிந்தநிலை நீங்கிப் - பிரியாக்**
**கருணை திருஉருவாய்க் காசினிக்கே தோன்றிக்**
**குருபரனென்று ஓர்திருப்பேர் கொண்டு - திருநோக்கால் --- 12**

**ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்**
**ஏழும் அத்துவாக்கள் இருமூன்றும் - பாழாக**

**ஆணவமான படலம் கிழித்து அறிவில்**
**காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப் - பூணும் --- 13**

**அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவும் காட்டிக்**
**கடியார் புவனமுற்றும் காட்டி - முடியாது**
**தேக்குபர மானந்தம் தெள்ளமுதம் ஆகிஎங்கும்**
**நீக்கமற நின்ற நிலைகாட்டிப் - போக்கும் --- 14**

**வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்**
**இரவும் கடந்துலவா இன்பம் - மருவுவித்துக்**
**கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்**
**வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல் - மின்னிடத்துப் --- 15**

**பூத்த பவளப் பொருப்பு ஒன்று வெள்ளிவெற்பில்**
**வாய்த்தனைய தெய்வ வடிவாகி - மூத்த**
**கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்து உள்நின்று**
**ஒருமலர்த்தார்க்கு இன்பம் உதவிப் - பெருகியெழு --- 16**

**மூன்றவத்தை யும்கழற்றி முத்தருட னேஇருத்தி**
**ஆன்றபர முத்தி அடைவித்துத் - தோன்றவரும்**
**யானெனதென்று அற்ற இடமே திருவடியா**
**மோனபரா னந்தம் முடியாக - ஞானம் --- 17**

**திருஉருவா இச்சை செயலறிவு கண்ணா**
**அருளதுவே செங்கை அலரா - இருநிலமே**
**சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே எவ்வுயிர்க்கும்**
**பின்னமற நின்ற பெருமானே - மின்னுருவம் --- 18**

**தோய்ந்த நவரத்நச் சுடர்மணியால் செய்த பைம்பொன்**
**வாய்ந்த கிரண மணிமுடியும் - தேய்ந்தபிறைத்**
**துண்டம்இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய**
**புண்டரம் பூத்தநுதல் பொட்டழகும் - விண்ட --- 19**

**பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு**
**அருள்பொழியும் கண்மலர் ஈராறும் - பருதி**
**பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்**
**குலவு மகரக் குழையும் - நிலவுமிழும் --- 20**

Back to Top

புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும் - வின்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும் - எவ்வுயிர்க்கும் --- 21

ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும் - சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும் - விடுத்தகலாப் --- 22

பாச இருள்துரந்து பல்கதிரில் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் - நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் - தாகமுடன் --- 23

வந்தடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும் - கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும் - ஆரமுதம் --- 24

தேவர்க்கு உதவும் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும் - ஓவாது
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும் - மார்பகத்தில் --- 25

வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும் - மொய்த்த
சிறுதொடிசேர் கையும்மணி சேர் ந்ததடங் கையும்
கறுவுசமர் அங்குசம்சேர் கையும் - தெறுபோர்--- 26

அதிர்கே டகம் சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும் - முதிராத
கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட் டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் - பைம்பொன் --- 27

**புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்**
**அரைஞாணும் கச்சை அழகும் - திருவரையும்**
**நாதக்கழலும் நகுமணிப் பொற் கிண்கிணியும்**
**பாதத்து அணிந்த பரிபுரமும் - சோதி --- 28**

**இளம்பருதி நூறா யிரங்கோடி போல**
**வளந்தரு தெய்வீக வடிவும் - உளந்தனில்கண்டு**
**ஆதரிப்போர்க்கு ஆருயிராய் அன்பரகத் தாமரையின்**
**மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே - ஓதியஐந்து --- 29**

**ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்**
**நீங்காத பேருருவாய் நின்றோனே - தாங்கரிய**
**மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்**
**தொந்தமுறும் வன்னமே தொக்காகப் - பந்தனையால் --- 30**
**Back to Top**

**ஒத்த புவனத் துருவே உரோமமாத்**
**தத்துவங்க ளேசத்த தாதுவா - வைத்த**
**கலையே அவயவமாக் காட்டும் அத்து வாவின்**
**நிலையே வடிவமா நின்றோய் - பலகோடி --- 31**

**அண்டம் உருவாகி அங்கம் சராசரமாய்க்**
**கண்டசக்தி மூன்றுட் கரணமாய்த் - தொண்டுபடும்**
**ஆவிப் புலனுக்கு அறிவு அளிப்ப ஐந்தொழிலும்**
**ஏவித் தனிநடத்தும் எங்கோவே - மேவ --- 32**

**வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானம்**
**தரும்அட்ட யோகத் தவமே - பருவத்து**
**அகலாத பேரன்பு அடைந்தோர் அகத்துள்**
**புகலாகும் இன்பப் பொருப்பும் - சுகலளிதப் --- 33**

**பேரின்ப வெள்ளப் பெருக்காறு மீதானம்**
**தேரின்ப நல்கும் திருநாடும் - பாரின்பம்**
**எல்லாம் கடந்த இருநிலத்துள் போக்குவரவு**
**அல்லாது உயர்ந்த அணிநகரும் - தொல்லுலகில் --- 34**

**ஈறும் முதலுமகன்று எங்குநிறைந்து ஐந்தெழுத்தைக்**

கூறி நடாத்தும் குரகதமும் - ஏறுமதம்
தோய்ந்து களித்தோர் துதிக்கையினால் பஞ்சமலம்
காய்ந்த சிவஞானக் கடாக்களிறும் - வாய்ந்தசிவ --- 35

பூரணத்துள் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துள் கட்டு நறுந்தொடையும் - காரணத்துள்
ஐந்தொழிலும் ஓவாது அளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும் - சந்ததமும் --- 36

நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போல்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும் - தேக்கமழ்ந்து
வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கமெனப் பெற்றோனே - தேசுதிகழ் --- 37

பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கண் பரஞ்சோதி - ஆங்கொருநாள்
வெந்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோடு அதோமுகமும் - தந்து --- 38

திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியாறு உய்ப்ப - விரிபுவனம்
எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்
பொங்கும் தழல்பிழம்பைப் பொற்கரத்தால் - அங்கண் --- 39

எடுத்தமைத்து வாயுவைக்கொண்டு ஏகுதியென்று எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய் - அடுத்ததொரு
பூதத் தலைவகொடு போதிஎனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப் - போதொருசற்று --- 40
**Back to Top**

அன்னவளும் கொண்டமைதற்கு ஆற்றாள் சரவணத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்பத் திருஉருவாய் - முன்னர்
அறுமீன் முலையுண்டு அழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன் - குறுமுறுவல் --- 41

கன்னியொடும் சென்று அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்டு அவ்வுருவம் ஆறினையும் - தன்னிரண்டு

**கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து**
**மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச் - செய்ய --- 42**

**முகத்தில் அணைத்துச் சி மோந்து முலைப்பால்**
**அகத்துள் மகிழ்பூத்து அளித்துச் - சகத்தளந்த**
**வெள்ளை விடைமேல் விமலன் கரத்தில் அளித்து**
**உள்ளம் உவப்ப உயர்ந்தோனே - கிள்ளைமொழி --- 43**

**மங்கை சிலம்பின் மணிஒன்ப தில்தோன்றும்**
**துங்க மடவார் துயர்தீர்ந்து - தங்கள்**
**விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்**
**மருப்பாயும் தார்வீர வாகு - நெருப்பிலுதித்து --- 44**

**அங்கண் புவனம் அனைத்தும் அழித்துலவும்**
**செங்கண் கடா அதனைச் சென்று கொணர்ந்து - எங்கோன்**
**விடுக்குதி என்று உய்ப்ப அதன் மீதிவர்ந்து எண்டிக்கும்**
**நடத்தி விளையாடும் நாதா - படைப்போன் --- 45**

**அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தொன்று**
**உகந்த பிரணவத்தின் உண்மை - புகன்றிலையால்**
**சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்கன் என்றுமுனம்**
**குட்டிச் சிறையிருத்தும் கோமானே - மட்டவிழும் --- 46**

**பொன்னம் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப**
**முன்னம் பிரமம் மொழிந்தோனே - கொன்னெடுவேல்**
**தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக**
**வீரவடி வேல் விடுத்தோனே - சீரலைவாய்த் --- 47**

**தெள்ளு திரை கொழிக்கும் செந்தூரில் போய்க்கருணை**
**வெள்ளம் எனத்தவிசின் வீற்றிருந்து - வெள்ளைக்**
**கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக் கடல்சூழ்**
**மயேந்திரத்தில் புக்கு இமையோர் வாழச் - சயேந்திரனாம் --- 48**

**சூரனைச் சோதித்துவரு கென்றுதடம் தோள்விசய**
**வீரனைத் தூதாக விடுத்தோனே - காரவுணன்**
**வானவரை விட்டு வணங்காமை யால் கொடிய**
**தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப் - பானு --- 49**

பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய் - சகமுடுத்த
வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்தநெடும்
சூருடலம் கீண்ட சுடர் வேலோய் - போரவுணன் --- 50
**Back to Top**

அங்கம்இரு கூறாய் அடன்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும் - அங்கவற்றுள்
சீறும்அர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே - மாறிவரு --- 51

சேவல் பகையைத் திறல்சேர் பதாகைஎன
மேவத் தனித்துயர்த்த மேலோனே - மூவர்
குறைமுடித்து விண்ணம் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்து ஆட் கொண்டளித்த தேவே - மறைமுடிவாம் --- 52

சைவக்கொழுந்தே தவக்கடலே வானுதவும்
தெய்வக் களிற்றை மணம்செய்தோனே - பொய்விரவு
காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்தப் - பூமருவு --- 53

கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்து இனிதிருந்து - மேன்மைபெறத்
தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே - உள்ளம் உவந்து --- 54

ஆறுதிருப் பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறும் அவர் சிந்தைகுடி கொண்டோனே - நாறுமலர்க்
கந்திப் பொதும்பர்எழு காரலைக்கும் சீரலைவாய்ச்
செந்தில் பதிபுரக்கும் செவ்வேளே - சந்ததமும் --- 55

பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் - பல்கோடி
பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும்அடல்
பூதமும் தீ நீரும் பொருபடையும் - தீது அகலா --- 56

**வெவ்விடமும் துட்ட மிருகமுதலாம் எவையும்**
**எவ்விடம் வந்து எம்மை எதிர்ந்தாலும் - அவ்விடத்தில்**
**பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்**
**அச்சம் அகற்றும் அயில்வேலும் - கச்சைத் --- 57**

**திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு**
**அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் - விரிகிரணம்**
**சிந்தப் புனைந்த திருமுடிகள் ஒராறும்**
**எந்தத் திசையும் எதிர்தோன்ற - வந்திடுக்கண் --- 58**

**எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து**
**உல்லாசமாக உளத்திருந்து - பல்விதமாம்**
**ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்**
**பேசும் இயல் பல்காப் பியத் தொகையும் - ஓசை --- 59**

**எழுத்துமுத லாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து**
**பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து - ஒழுக்கமுடன்**
**இம்மைப் பிறப்பில் இருவா தனை அகற்றி**
**மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மைவிடுத்து --- 60**

**ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்**
**தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய**
**கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு**
**அடியேற்கு முன்னின்று அருள். --- 61**

## வேல் மாறல் பதிகம்

### விநாயகர் வணக்கம்

**நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்**
**தஞ்சத் த ருள் சண்முகனுக்கு இயல்சேர்**
**செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே**
**பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.**

**( "வேலும் மயிலும் சேவலும் துணை" ஆறு முறை ஓதவும் ).**

## முருகன் பெருமை

**விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா**
**மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த**
**பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி**
**வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.**
**( "வேலும் மயிலும் சேவலும் துணை" ஆறு முறை ஓதவும் ).**

## மயிலின் ஆற்றல்

**தடக்கொற்ற வேள்மயி லேயிடர் தீரத் தனிவிடில் நீ**
**வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்**
**கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்**
**திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே.**
**( "வேலும் மயிலும் சேவலும் துணை" ஆறு முறை ஓதவும் ).**

## வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் தொகுத்தருளிய வேல் மாறல்

**திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை**
**விருத்தன்என(து) உளத்தில்உறை**
**கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே.**

**( இந்த அடியை முதலில் 20 முறை ஓதவும் )**

**பின்வரும் ஒவ்வோரடியின் முடிவிலும் "திரு" என்ற**
**இடத்தில் மேற்கண்ட முழு அடியையும் கூறவேண்டும்**

1. **பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை**
   **கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி**
   **விழிக்குநிகர் ஆகும் … … … ( … திரு … )**
2. **திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை**
   **விருத்தன்என(து) உளத்தில்உறை**
   **கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே … … … ( … திரு … )**
3. **சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை**
   **அடுத்தபகை அறுத்(து)எறிய**
   **உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் … … … ( … திரு … )**

4. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

5. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ... ... ... ( ... திரு ... )

6. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ... ... ... ( ... திரு ... )

7. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும் ... ... ... ( ... திரு ... )

8. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ... ... ... ( ... திரு ... )

9. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... ... ... ( ... திரு ... )

10. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... ( ... திரு ... )

11. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ... ... ... ( ... திரு ... )

12. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ... ... ... ( ... திரு ... )

13. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ... ... ( ... திரு ... )

14. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ... ... ... ( ... திரு ... )

15. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ... ... ... ( ... திரு ... )

16. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்

பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ... ... ... ( ... திரு ... )

17. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ... ... ... ( ... திரு ... )

18. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ... ... ... ( ... திரு ... )

19. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ... ... ( ... திரு ... )

20. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ... ... ... ( ... திரு ... )

21. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ... ... ... ( ... திரு ... )

22. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ... ... ... ( ... திரு ... )

23. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... ... ... ( ... திரு ... )

24. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... (  திரு  )

25. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும் ... ... ... ( ... திரு ... )

26. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ... ... ... ( ... திரு ... )

27. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ... ... ... ( திரு )

28. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு

கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ... ...  ( திரு )

**29.** சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ... . ( திரு )

**30.** தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

**31.** பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

**32.** திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ... ...  ( .திரு )

**33.** தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

**34.** சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ...  ( திரு )

**35.** திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ... ... ( திரு ... )

**36.** பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

**37.** தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ... ... ... ( ... திரு ... )

**38.** துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஒர் துணை ஆகும் ... ... ... ( திரு  )

**39.** சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ... .. (  திரு )

**40.** பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ... ... ... ( திரு  )

41. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் . ( திரு )
42. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ... ... ... ( ... திரு ... )
43. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... ( திரு )
44. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... . ( திரு )
45. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ... ... ( திரு )
46. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ... ... ... ( திரு )
47. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ... (திரு )
48. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ( திரு )
49. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ...(திரு )
50. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ( திரு )
51. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ... .. ( திரு )
52. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ... ... ... ( ... திரு ... )
53. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை

முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... ( திரு )

54. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... ( திரு )

55. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ... (திரு )

56. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ... ... ... ( ... திரு ... )

57. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ... ( திரு )

58. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ... ... ( திரு )

59. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ... ... ( திரு )

60. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும் ... ... ... ( ... திரு ... )

61. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ... ( திரு ... )

62. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

63. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

64. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் .... ( திரு )

65. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை

விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே .... ( ... திரு ... )

( ... முடிவிலும் இந்த அடியை 20 முறை ஓதவும் ... )

( "வேலும் மயிலும் சேவலும் துணை" ஆறு முறை ஓதவும் ).
தேரணி யிட்டுப் புரம் எரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்து சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

( "வேலும் மயிலும் சேவலும் துணை" ஆறு முறை ஓதவும் ).
வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
தொளைத்தவேல் உண்டே துண
( "வேலும் மயிலும் சேவலும் துணை" ஆறு முறை ஓதவும் ).

## வாழ்த்து - கந்தபுராணம்

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க – வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க – செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம்.